மாலை: 1 மலர்: 13

# சத்வித்யா

எஸ்பி -75, சிட்கோ தொழில்துறை எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600058.

மாதம் இரு முறை
வெளிவரும்
மார்ச் 1முதல்
15வரை

ஆன்மீக
விஞ்ஞான
இதழ்



# சிவ புராண சிந்தனைகள்

★ சிவ புரான சிந்தனைகள் ★ அரிய ஆன்மீக தகவல்

★ மூலிகை ரகசியம் ★ நிலம்,செல்வம் பெற,,,

அனைத்து இதழ்களையும் AstroVed.com இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு செய்து பயன் பெறலாம்
மேலும் விபரங்களுக்கு போன்: 88702 88701, www.astroved.com

AstroVed

# சத்வித்யா



நம்முடைய தேவைகள் ஒவ்வொன்றிற்கும் ஒரு தெய்வம் உண்டு, செல்வத்திற்கு லக்ஷ்மி, குபேரன், அறிவுக்கு ஹயக்ரீவர், கல்வி, கலைகளுக்கு சரஸ்வதி இப்படி தெய்வங்கள் உண்டு, அந்த ஆற்றலை நாம் எவ்வாறு பெற முடியும்? ஒலி அலைகளால் முடியும் அதை சப்தங்கள் என்போம், அவை தான் மந்திரங்கள் இந்த மந்திரங்களை தொடர்ந்து நாம் சொல்லிக் கொண்டே இருக்கும் போது அந்த தெய்வங்களின் ஆற்றல் நம்மை வந்து சேர்கிறது. அதைவிடுத்து, இது நடக்குமா? முடியுமா? என எதிர்மறை எண்ணத்தோடு இருந்தால் எதையும் பெற முடியாது, இந்த மந்திரங்கள் நம் மூளையில் செயல்பட்டு நாம் வேண்டுவதை வழங்குகின்றன.

~ Dr. Baskaran Pillai

அன்பு சத்வித்யா நேயர்களே!

எந்தத் துன்பம் வந்தாலும் இறையருள் மட்டும் இருந்தால் போதும்; இன்பம் ஒன்றே இறுதியில் நிலைக்கும் என்பதே நமது பாரத நாட்டு மக்களின் பண்பட்ட நம்பிக்கையாய் உள்ளது. இயற்கைப் பேரிடரா? எதிர்பாரா இழப்பா? விலைவாசி உயர்வா? இன்னும் என்னென்ன பிரச்சனைகள் வந்தாலும் நம் நாடு நலிவடைவதில்லை. காரணம், மக்களின் ஆன்மீக நம்பிக்கை; அந்த நம்பிக்கையின் வழியாய் பிறக்கின்ற வழிபாடுகள்! பூஜை, ஹோமங்கள் போன்ற வழிபாட்டு முறைகளால் பூர்வஜென்ம கர்மவினைகளையும் மீறி பொன்னான வாழ்வை அருளும் இறைவனின் திருப்பாதம்! ஆலய வழிபாடுகளும் இல்லத்தையே ஆலயம் போல் மாற்றும் இல்லற சிறப்புகளும் உள்ளவரை நமது மக்கள் நிம்மதியுடனும் ஒற்றுமையுடனும் வாழ்வார்கள் இறைவன் அருள்புரிவான் .



(அச்சிட்டு வெளியிடுவோர்)
ஆஸ்ட்ரோவேட்.காம்

# மாசி மகமும் ஸ்ரீமுஷ்ணமும்

இந்த மதத்தைச் சேர்ந்தவர்க்குத் தான், இந்த இனத்தைச்சேர்ந்தவர்க்குத் தான் தெயவம் அருள் புரியும் என்பது எங்குமில்லை. தெய்வத்திற்கு இன, மொழி, மத வேறுபாடுகளெல்லாம் கிடையாது. இதை விளக்கும் நிகழ்வு இது.

பூரா ஸாஹிப் என்பவர் இஸ்லாமியர்களின் தலைவராக விளங்கியவர். அவருக்கு முதுகில் ராஜபிளவை என்னும் கட்டி உண்டானது. திறமைசாலியான மருத்துவர்கள் பலர் மருத்துவம் பார்த்தும், எதுவும் பலனளிக்க வில்லை; நாளாக நாளாக வலி அதிகமாக,தாங்கமுடியாமல் துடித்தார், தெரிந்தவர்கள் அனைவரிடமும் சொல்லி, "என் துயரம் தீர வழி ஏதேனும் உண்டா?" எனக்கேட்டார்.

"ஸ்ரீமுஷ்ணத்தில் வெங்கடராவ் என்ற உப்பு இலாகா அதிகாரி இருக்கிறார். பெருமாள் பக்தியில் ஊறிப்போனவர்.



அவரிடம்போய்க் கேட்டால், ஏதாவது வழி பிறக்கும்" என்றார்கள் பலர்.

பூரா ஸாஹிப் முதலில் தயங்கினார். இருந்தாலும் அவரதுநோயின் கொடுமை, அவரைக்கொண்டு போய் வெங்கடராவின் முன்னால் நிறுத்தியது. வெங்கடராவிடம் தன் துயரத்தை விரிவாகச்சொன்ன பூராஸாஹிப், "என்னைப் பிடித்திருக்கும் இந்த ராஜபிளவை தீர, ஏதாவது வழி காட்டுங்கள்!" என வேண்டினார்; "இவர் ஏதேனும்பதில் சொல்வார்" என, எதிர்பார்த்துக் காத்திருந்தார்.

ஆனால் அவர் எதிர் பார்த்தபடி வெங்கடராவ் எந்தப் பதிலையும் சொல்லவில்லை; வேகவேகமாகத் துளசி தீர்த்தத்தைக் கொண்டு வந்து, பூராஸாஹிப்பிடம் அளித்தார்; "இதைச்சாப்பிட்டு விட்டுச் செல்லுங்கள்!" என்றார் வெங்கடராவ். அதன்படியே பகவானின் துளசி தீர்த்தப் பிரசாதத்தை உண்டுவிட்டு, வீடு திரும்பினார் பூராஸாஹிப்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு அன்று இரவு நன்றாகத் தூங்கினார் பூராஸாஹிப். அவர் கனவில் ஒரு பன்றி வந்து, முதுகைக் குத்துவதைப் போன்ற காட்சி வந்தது. ஒன்றும் புரியாவிட்டால் கூட, பூராஸாஹிப்பிற்கு மெய் சிலிர்த்தது. மறுநாள்...பூராஸாஹிப்பின் ராஜபிளவை முழுதுமாகக் குணமடைந்தது. மெய் சிலிர்த்தது அவருக்கு, "ஸ்ரீமுஷ்ணம் வராகசாமி அருளால்தான், என் ராஜபிளவை நீங்கியது" எனப்புகழ்ந்து, நூற்றைம்பது ஏக்கர் நன்செய் நிலத்தை, ஸ்ரீமுஷ்ணம்வராக ஸ்வாமிக்கு எழுதி வைத்தார்.

ஆண்டுகள் பல கடந்தன; பூராஸாஹிப்பின் வாழ்நாள் முடிந்தது. ஸ்ரீமுஷ்ணத்தின் அருகிலுள்ள கிள்ளை என்ற ஊரில் அவரது சமாதி அமைந்தது. வராக ஸ்வாமியின் அருளால் பூராஸாஹிப்பின் துயர்தீர்ந்ததை நினைவு படுத்துவதற்காகவும்; தெய்வ அருளைப்பெறுவதில் எந்தவிதமான வேறுபாடும் இல்லை என்பதை வெளிப்படுத்தி வந்ததற்காகவும், இப்போதும் மாசி மக உற்சவத்தின்போது, உற்சவரைப் பூராஸாஹிப்பின் சமாதியருகில் எழுந்தருளச் செய்து, தீபாராதனை செய்யப் படுகிறது.

பூராஸாஹிப்பின் குடும்பத்தாருக்குப் பிரசாதங்கள் அளிக்கும் வழக்கமும் உள்ளது. கோவில் சன்னதிவரை செல்ல இஸ்லாமியர்களுக்கு இந்தக்கோவிலில் அனுமதி வழங்கப் பட்டிருக்கிறது.

~ சொல்லின் செல்வர் PN பரசுராமன்

# மனித உடம்பில் உள்ள 7 சக்கரங்களும் அவற்றை உரமூட்டும் மந்திரங்களும்

மனித உடலில் ஆதாரமாக இந்த ஏழு சக்கரங்கள் இருக்கிறது. இந்த ஏழு சக்கரங்களும் உடலில் உள்ள உடல் பாகங்கள் மட்டும் அல்லாது நம் வாழ்வின் அனைத்து விசயங்களுக்கும் தொடர்புடையதாகவே இருக்கிறது. இந்த சக்கரங்கள் ஸ்பைனல் கார்ட் என்று அழைக்கக் கூடிய முதுகு தண்டுவடத்தில் ஒவ்வொன்றாக அமைந்துள்ளது. இவ்வுலுலக பற்று முதல் ஆன்மீக தொடர்பு வரை உள்ள ஏழு நிலைகளை சுட்டிக்காட்டுகிறது. அவை.



1. மூலாதாரம்
2. ஸ்வாதிஷ்டானம்
3. மணிப்பூரகம்
4. அனாகதம்
5. விசுத்தி
6. ஆகினயம் மற்றும்
7. சகஸ்ராரம்

## மூலாதாரம்

இந்த சக்கரமானது வால் எலும்பு முடியும் இடத்தில் இருக்கிறது. மூலாதார சக்கரத்தின் பீஜ மந்திரம் "லம்" ஆகும். இந்த சக்கரம் இருக்கும் பகுதியை மனதில் கற்பனை செய்து கொண்டு இந்த மந்திரத்தை தொடர்ந்து தினமும் உச்சரித்து தியானம் செய்வதால் வாழ்க்கையை சுயமாக செவ்வனே நடத்துவதற்கு உண்டான தொழில், உத்தியோகம், தனம் நிறையப் பெருக்கி கொள்ள முடியும்.

## ஸ்வாதிஷ்டானம்

இந்த சக்கரமானது தொப்புளுக்கு இரண்டு இஞ்ச்சுக்கு கீழே அமைந்துள்ளது. ஸ்வாதிஸ்டான சக்கரத்தின் பீஜ மந்திரமானது "வம்" ஆகும். இந்த சக்கரம் இருக்கும் பகுதியை மனதில் கற்பனை செய்து கொண்டு இந்த மந்திரத்தை தொடர்ந்து தினமும் உச்சரித்து தியானம் செய்வதால் செல்வ வளம், இன்பம், கணவன் மனைவிக்கு இடையே அன்யோன்யம் மற்றும் நல்ல தாம்பத்திய வாழ்க்கை கிடைக்கும்.

## மணிப்பூரகம்

இந்த சக்கரமானது வயிற்றுப் பகுதியில் அமைந்துள்ளது. மணிப்பூரக சக்கரத்தின் பீஜ மந்திரமானது "ரம்" ஆகும். இந்த சக்கரம் இருக்கும் வயிற்றுப்பகுதியை மனதில் கற்பனை செய்து கொண்டு இந்த மந்திரத்தை தொடர்ந்து தினமும் உச்சரித்து தியானம் செய்வதால் தன்னம்பிக்கை மற்றும் சுயமரியாதை கூடும். நம்மால் எதையும் சாதிக்க முடியும்.

## அனாகதம்

இந்த சக்கரமானது நெஞ்சின் மத்தியில் அமைந்துள்ளது. அனாகத சக்கரத்தின் பீஜ மந்திரமானது "யம்" ஆகும். இந்த சக்கரம் இருக்கும் நெஞ்சின் மத்திய பகுதியை மனதில் கற்பனை செய்து கொண்டு இந்த மந்திரத்தை தொடர்ந்து தினமும் உச்சரித்து தியானம் செய்வதால் காதல், அன்பு, பற்று பாசம், ஆனந்த நிலை மற்றும் உள்மன அமைதி போன்றவை அதிகரித்து, அடுத்தவரிடம் நல்ல உறவு நிலையை மேம்படுத்திக்க முடியும்.

## விசுத்தி

இந்த சக்கரமானது தொண்டை பகுதியில் அமைந்துள்ளது. விசுத்தி சக்கரத்தின் பீஜ மந்திரமானது "ஹம்" ஆகும். இந்த சக்கரம் இருக்கும் தொண்டை பகுதியை மனதில் கற்பனை செய்து கொண்டு இந்த மந்திரத்தை தொடர்ந்து தினமும் உச்சரித்து தியானம் செய்வதால் அடுத்தவருடன் தகவல் தொடர்பு திறன் அதிகாரிக்கும். வாக்கு வன்மையும், வாக்கு பலிதமும் உண்டாகும்.

## ஆகினயம்

இந்த சக்கரமானது இரு புருவங்களுக்கு மத்தியில் அமைந்துள்ளது. இந்த சக்கரம் பிட்யூட்டரி சுரப்பியை தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ளது. ஆகினயம் சக்கரத்தின் பீஜ மந்திரமானது "ஓம்" ஆகும். இந்த சக்கரம் இருக்கும் நெற்றிக்கண் பகுதியை மனதில் கற்பனை செய்து கொண்டு இந்த மந்திரத்தை தொடர்ந்து தினமும் உச்சரித்து தியானம் செய்வதால் கற்பனை வளம் அதிகரிக்கும். உள்ளுணர்வு மற்றும் ஞானம் அதிகாரிக்கும்.

## சகஸ்ராரம்

இந்த சக்கரமானது நமது உச்சந்தலையில் அமைந்துள்ளது. பீனியல் சுரப்பியை தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. இந்த சக்கரம் தான் நமக்கும் பிரபஞ்சத்திற்கும் இடையே தொடர்பை ஏற்படுத்தி நமது ஆன்மீக எண்ணத்தை அதிகரித்து, கடவுளை அடையும் வழியை நமக்கு காட்டுகிறது. இந்த சகஸ்ரார சக்கரத்தின் மந்திரமானது "அவும்" ஆகும். இந்த சக்கரம் இருக்கும் உச்சந்தலை பகுதியை மனதில் கற்பனை செய்து கொண்டு இந்த மந்திரத்தை தொடர்ந்து தினமும் உச்சரித்து தியானம் செய்வதால் ஆன்மீக நாட்டம் அதிகரித்து எளிதில் நாம் பரமாத்மாவுடன் தொடர்பை ஏற்படுத்தி கொண்டு பேரின்பத்தை அடையமுடியும்.

## தியானம் மற்றும் மந்திரத்தை உச்சரிக்கும் முறை

தூய இடத்தில் பாயில் அல்லது இருக்கையில் அமர்ந்து கண்களை மூடி ஒவ்வொரு மந்திரத்திற்கும் ஐந்து நிமிடம் வீதம் ஏழு மந்திரங்களுக்கு முப்பத்தி ஐந்து நிமிடங்கள் தொடர்ந்து கூறி வந்தால் நாம் அபரிமிதமான பலன்களை அடைய முடியும் என்பதில் எந்தவித மாற்று கருத்தும் இல்லை.

~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்

# சிவ புராண சிந்தனைகள்

திருப்பெருந்துறையிற் ஈசனே சற்குருவாக எழுந்தருளி மணிவாசகப் பெருமானுக்கு அருளிய திருவருட்பேறு யாருக்கு வாய்க்கும்?

திருவாதவூரார் தாம் கொண்ட சிவஞானத்தால் அருளிய அற்புத நூலே திருவாசகச்செழுமறை. சிவபெருமானின் திருவருளில் தோய்ந்த சித்தாந்த கருத்துக்களை உள்ளடக்கிய உயரிய தெய்வப் பனுவல் .



அன்பிலிருந்து ஆர்வம் மலரும் அவ் வன்பிலிருந்து அருளும் தோன்றும் .

அன்பு - உயிர் கிரகத்தின் உன்னத திறவுகோல்!

அன்பு மிகுந்து அருள் வியாபித்து துறவறத்தையும் தூய்மை படுத்தும்.

அன்பு - பாசம் - எல்லாம் கடந்து பக்தி மேலிட உலகப் பற்றை விட சிவப்பேறே பெரும்பேறு என உணர்ந்தோர் ஆன்றோர் ஆகின்றனர்.

பக்தி மிகும் போது,

"பத்தியாகும் மெய்க் கடலிடை எழுதரும் அமுது நற்பரம்" என்று உணரலாம் .

உயிர்க்குள் உயிராய் இருக்கும் ஈசனை உணர்ந்து ஈசனே முழுமுதற் பொருள் என்பதை உணர்ந்தெழுதலே உண்மையான தெய்வ பக்தியாகும் .

தன்னை மனிதனுக்கு கொடுத்தல் மனித மாண்பு தன்னை இறைவனுக்கு கொடுத்தல் என்பது எல்லாப் பக்திகளிலும் உயர்ந்த பக்தியாகும் இதனை வடநூலறிஞர்கள் "ஆத்ம நிவேதன பத்தி" என்பார்கள்.

எந்த ஒரு செயலுக்கும் நாமே முதல் என்ற எண்ணம் வருதல் தவறாகும் ஈசனே ஞான முதலவன் என்ற உண்மையை உணர்தல் வேண்டும்.

திருவாசகம் - அன்பு நூல் எனில் அது மிகையன்று.

திருவாசகத் தேன் மலரில் சிவபுராணமே முதல் இடத்தை பெற்று சிவரூபமாகவே அருட்காட்சி அளிக்கின்றது.

"சிவனவனென் சிந்தையுள் நின்ற வதனால்  
அவனருளாலே அவன்றாள் வணங்கிச்  
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை  
முந்தை வினை முழுது மோய உரைப்பன்யான்."

என்ற சிவபுராண பாடல்வரிகளை மனம் மொழி மெய் கலந்து நோக்குங்கால் மனத்தெளிவு பிறக்கும் அன்றோ ?

பழம் பொருளாகிய சிவத்தின் பழமை இயல்புகளை கூறுவதே சிவபுராணம்.

ஈசனுக்கு பழையோன் என்ற திருநாமமும் உண்டு.
முன்னைப் பழம் பொருட்டு முன்னை பழம் பொருளே என்று இறைவனின் பழமையைப் பழமைக்கும் பழமை என்பர்.
"ஈசர் தமக்கியல்பான திருநாம முதலெவையும் மாசறவே வாழ்கவென வாழ்த்துகின்ற அருட்குறிப்பாம்"

என்று சிவபுராணத்திற்கு கருத்து கூறும் பாடல் வரிகளாகும்.
"சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவபுரத்தினுள்ளார் சிவனடிக்கீழ்"
என்று மாணிக்க வாசகர் அருளுவதன் நோக்கம் ஈசனின் அருள் பரிபூரணமாக பெற வேண்டும் என்பதே.
"உய்யவென் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற மெய்யா" என்ற வைர வரிகளும் அல்லற்பிறவி அறுப்பானே ஓ வென்று என்ற வரிகளும் சிந்திக்க கூடியவை.
நமச்சிவாய! வா ஆழ்க நாதன்றாள் வாழ்க இமைப் பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க, என்ற மணிவாசகப் பெருமான் மனமுருக ஈசனை தன் இதயக்கமலத்தில் எழுந்தருள அன்பெனும் பாமாலை தொடுத்து திருவாசகம் என்னும் கோபுர தீபத்தை காட்டி மகிழ்கின்றார்.

ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி தேசன் அடி போற்றி சிவன் சேவடி போற்றி நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி என்று பாகாய் உருகுகின்றார் மணிவாசகப் பெருமான்.
இன்றைய ஆவுடையார் கோவிலே திருப்பெருந் துறை!
திருப்பள்ளி எழுச்சியில் பத்துப்பாடல்களிலும் திருப்பெருந்துறையுறை சிவபெருமான் மீது தீராக் காதல் கொண்டவர் திருவாதவூரார் அன்றோ
சீரார் பெருந்துறை நந் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளும் மலை போற்றி
சிவனவன் என் சிந்தையுள் நின்றவதனால்
அவனருளாலே அவன்றாள் வணங்கி
என்ற வரிகளை நோக்குங்கால் எதற்குமே சிவனருள் முதன்மையானது. அவனை வழிபடவே அவனருள் தேவை என்பதும் சிந்திக்கத்தக்கது
சிவ புராணப்பயன் அளவற்றது
முந்தை வினை நீங்குதல் மட்டுமின்றி இம்மை மற்றும் மறுமையில் உண்டாகும் நல் வினைகளுக்கு ஈசனருளே காரணமாக அமையும்.
நீக்க முடியாத துன்ப நிகழ்வுகளை களைந்தெறிய திருவாசகத் தேன் பெரிதும் துணை நிற்கும்.

அகமும் முகமும் மலர, உடம்பும் உள்ளமும் தூய்மையுடன் மனம்மொழி மெய் ஒன்றுபட சிவ புராணத்தை காதலாகி கசிந்துருக பாடி வழிபட்டால் உமா மகேஸ்வரனின் உன்னத அருளையும் உலகம்மையின் அருளையும் பெறலாம்.

எழுதியவர்
சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர் சீனு செந்தாமரை
கடலூர்

# பரகாய பிரவேசம்

முக்காலத்தையும் உணரும் சக்தி முற்காலத்தில் வாழ்ந்த முனிவர்களுக்கும் சித்தர்களுக்கும் வெகு இயல்பாக இருந்தது. எப்படி அவர்களுக்கு இந்த கலை சாத்தியபட்டது என்றால் அவர்களின் உணவு முறையும் தியானம் மற்றும் தவமும் இந்த முக்காலத்தையும் உணரும் சக்தி அவர்களுக்கு கிடைக்கப் பெற்றது. இது மட்டும் அல்லாமல் பூத உடலில் இருந்து தனது சூட்சும உடலை பிரித்து எடுத்து. அந்த சூட்சும உடல் மூலம் சகல அண்டங்கள் மற்றும் கிரகங்களுக்கு செல்லும் வித்தையை கற்றுவைத்து இருந்தனர். இந்த வித்தை மூலம் நினைக்கும் நொடியில் இறந்தகாலம் மற்றும் எதிர்காலத்திற்கு பயணிக்க முடியும். சூட்சும உடலுக்கு வெப்பம் மற்றும் குளிர்ச்சி தெரியாது. எனவே மிக வெப்பமான சூரியனுக்கும் செல்லமுடியும் மிகக்குளிர்ச்சியான சனி கிரகத்திற்கும் செல்ல முடியும். இறந்த நமது முன்னோர்களை சந்தித்து சில வாழ்க்கை பிரச்சனைகளுக்கு தீர்வும் காணமுடியும். இது மட்டும் அல்லாமல் மற்ற லோகங்களில் உள்ள தேவதைகளையும் தெய்வங்களையும் தரிசிக்க முடியும். அவர்களின் உதவியுடன் தீர்க்க முடியாத உடல் நோயிலிருந்து பூரண குணமும் அடையலாம். ஒழுக்கமான வாழ்வும் தியானம் மற்றும் தவம் மூலம் தற்காலத்திலும் இந்த பரகாய பிரவேசம் சாத்தியப்படும்.



~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்

# ஹோலி

மாசி மாதப் பௌர்ணமியன்று, வடக்கே மும்பை, கொல்கத்தா முதலான பகுதிகளில் "ஹோலி" பண்டிகை விமரிசையாகக் கொண்டாடப்படும். மூன்று நாட்களுக்கு முன்பாகவே கொண்டாட்டங்கள் துவங்கும். வண்ணவண்ணப் பொடிகளையும் சாயம் கலந்த தண்ணீரையும் ஒருவர்மீது ஒருவர் வீசிக் கொள்வார்கள்.ஒரே குதூகலமயமாக இருக்கும். இந்த ஹோலிப் பண்டிகையைப் பற்றிய சுருக்கமான தகவல்...

அரக்கனான இரணியகசிபுவின் உறவுக்காரப்பெண் "ஹோலிகா" என்ற அரக்கி. குழந்தைகளைக் கொன்று தின்பதே இவள் வழக்கம். நெருப்பும் இவளை எரிக்க முடியாது. இதையறிந்த இரணியகசிபு ஒரு தீர்மானத்திற்கு வந்தான், நாராயண நாமம் சொல்லித் தனக்கு வெறுப்பை உண்டாக்கிய, தன் மகனான பிரகலாதனைக் கொல்லும் பொறுப்பை, "ஹோலிகா" விடம் ஒப்படைத்தான்.

பிரகலாதனைக் கைகளில் தூக்கிக்கொண்ட ஹோலிகா, "மன்னா! இன்னும் சற்று நேரத்தில் பார்! இந்தப்பயல் பிரகலாதன் சாம்பலாகி விடுவான். கவலையை விடு" என்று சொல்லியபடியே, கொழுந்து விட்டெரியும் தீயில் குதித்தாள் ஹோலிகா. தீ தன்னை எரிக்காது என்ற தைரியம் அவளுக்கு.

ஆனால் தீயில் குதித்த சற்று நேரத்திலேயே ஹோலிகா எரிந்து போனாள். பிரகலாதனோ எந்தத் தீங்கும் இல்லாமல், தீயிலிருந்து வெளியே வந்தான்.

நல்லதை அழிக்க முனைந்த "ஹோலிகா" அழிந்த நன்னாளே "ஹோலிப்பண்டிகை"யாகக் கொண்டாடப்படுகிறது. அத்திருநாளன்று "ஹோலிகா" கொடும்பாவி கட்டிக் கொளுத்துவார்கள். நல்லவற்றிற்கு அழிவு கிடையாது, தீயவற்றிற்கு என்றும் வாழ்வு கிடையாது என்பதை விளக்குவதே "ஹோலிப் பண்டிகை". தீமை அழிந்து நன்மைகள் கிடைப்தால் உள்ளம் துள்ளுகிறதல்லவா? அதையே, ஹோலிப்பண்டிகையின் போது செய்யப்படும் கொண்டாட்டங்கள் உணர்த்துகின்றன.



~ சொல்லின் செல்வர் PN பரசுராமன்

# மந்திர மகிமை

# நிலம்,செல்வம் பெற,,,

அன்பு சத்வித்யா நேயர்களே!

நம் அனைவருக்குமே சொந்தமாய் ஒரு வீடு வேண்டும்! நிறைய செல்வம் வேண்டும் என்ற எண்ணம் எப்போதும் மேலோங்கி நிற்கும்.

சிலருக்கு அந்த ஆசை எளிதில் நிறைவேறி விடும் பலருக்கு பகல் கனவாகவே ஆகிவிடும் அந்த கனவு நனவாகி அவர்களும் வீடு வாசல் செல்வச்செழிப்புடன் வாழ்வதற்கு வகை செய்கிறது சௌந்தர்ய லஹரியின் 91 வது மந்திரப்பாடல்!



அந்த மந்திரம் :-

பதந்யாஸ - க்கருடாபரிசய ___ மிவாரப்து ___ மனஸ:
ஸ்கலந்தஸ் தே கேலம் பவன கலஹம்சா ந ஜஹதி அதஸ்தேஷாம்
சிஷோம் ஸூபகமணி - மஞ்ஜீர ரணித-ச்சலாதா சஷாணம்
சரணகமலம் சாருசரிதே நிலம், செல்வம் பெற உதவுகின்ற மேற்கண்ட மந்திரத்தை ஜெபித்து, பல மன்னர்கள் தங்கள் நாட்டின் பரப்பளவை விரிவுபடுத்திக் கொண்டனர்.

பொக்கிஷங்களைக் குவித்தனர்.

சரி, மேற்கண்ட பாடலின் பொருள் என்ன என்பதனை இப்போது பார்க்கலாம்.

தாயே! உன்னைச் சுற்றிலும் இருக்கும் அன்னப் பறவைகள், உன் நடையழகை கற்றுக்கொள்ள நினைத்து, துள்ளித்துள்ளிக் குதித்து முடியாமல் தவிக்க, உன்னுடைய திருவடியில் உள்ள மங்களகரமான ரத்தினங்கள் இழைத்த சிலம்புகளின் ஒலி மூலமாகவே மறைமுகமாக அந்த அன்னங்கள் நடைபயில உதவுகின்றாயே!

இது போலவே, உன் திருவடி தரிசனம் காணும் எங்களுக்கும் உன் கடைக்கண் பார்வையால் சகல நலங்களும் அருளவேண்டும்.

மந்திரத்தை பிரயோசிக்கும் முறை:

இந்த மந்திரப் பாடலுக்கான யந்திரத்தை தங்கத் தகட்டில் வரைந்து பூஜைக்கு பயன்படுத்த வேண்டும். 25 நாட்களுக்கு தினமும் 2008 முறை வீதம் வடக்கு முகமாக அமர்ந்து மந்திரத்தை ஜபிக்க வேண்டும். ஜபிப்பதற்கு முன் லலிதா சகஸ்ரநாமத்தை குங்குமத்தால் அர்ச்சனை செய்தும் ஜபித்த பின் செந்தாமரை இதழ்களால் லக்ஷ்மி சகஸ்ரநாம அர்ச்சனையும் செய்ய வேண்டும்.

தேங்காய், பழம், பாயசம், பால் சாதம் ஆகியவற்றை நைவேத்யம் செய்ய வேண்டும்.

இப்படி செய்வதனால் நிலம் ,செல்வம் மட்டுமல்லாது ஆன்றோர் தொடர்பும் மிகுந்த செல்வாக்கும் கிடைக்கும்.

~ ரா. பன்னீர்செல்வம்

# அருள்மிகு குமரக்கோயில் என்னும்

# ஸ்ரீ முத்துக்குமார சுவாமி திருக்கோயில் திருத்தலப்பெருமை

நெய்தல் நிலமும் மருத நிலமும் சங்கமிக்கும் கடலூர் முதுநகரில் பழம் பெருமை வாய்ந்த அற்புத முருகத் திருத்தலம்! கடலூர் மாவட்டத் தலைநகர் கடலூர் புதுநகரிலிருந்து தெற்கே நான்கு கிலோ மீட்டர் தொலைவில் கடலூர் துறைமுக நகரில் இதயப்பகுதியாக விளங்கும் கடலூர் முதுநகரில் சக்தி வாய்ந்த திருத்தலமாக இத்திருத்தலம் அருட்காட்சி அளிக்கின்றது.



**இனி கோயிலின் சிறப்புகளை காண்போம்....**

அருள்மிகு குமரக்கோயில் தொன்மையான முருகன் ஆலயம்! "யாமிருக்க பயமேன்" என்று தைரியம் சொல்லும் மந்திரப்புன்னகை ஆறுமுகங்கள் கொண்ட ஸ்ரீ முத்துக்குமார தெய்வம் ஆறுதலை தரும் அழகே அழகு! பொதுவாக எல்லா கோயில்களிலும் ஸ்ரீ விநாயகர் சந்நிதி முதலில் இருக்கும். ஆனால் இந்தக் கோயிலில் கோயில் பின் பிரகாரத்தில் ஸ்ரீ ஆதிவிநாயகர் அழகாக சந்நிதி கொண்டுள்ளார். அமைதியும், அருளும் கொண்டு வசீகர அருள் தோற்றத்துடன் அருள் பாலிக்கும் ஆனந்த விநாயகர்! விநாயகப் பெருமானை தரிசித்துக்கொண்டே இருக்கலாம். காண கண்கோடி வேண்டும் சங்கட ஹர சதுர்த்தி நாளில் அபிஷேக ஆராதனைகள் அற்புதமாக நடைபெறும்.

அருள்மிகு குமரக்கோயில் வலது பக்கத்தில் ஸ்ரீ சென்ன கேசவப் பெருமாள் சந்நிதி கொண்டுள்ளார். அலங்காரப் பிரியர் ஸ்ரீ மகா விஷ்ணு!

உற்சவ மூர்த்தி எழிலாக நின்றக் கோலத்தில் அருள் பாலிக்கின்றார்.

மூலவருக்கு சந்தனக் காப்பு செய்யப்பெற்று வண்ண மலர்கள் தொடுக்கப் பெற்ற மாலைகள் அணிவித்தும், தூப தீப ஆராதனைகள் செய்யப் பெறுவதும் தனி அழகு!

வைகுண்ட ஏகாதசி நாளில் சொர்க்கவாசல் திறக்கப்பட்டு கருடாழ்வார் வாகனத்தில் பெருமாள் பவனிவரும் போது கோவிந்தா கோவிந்தா என்று பக்தியுடன் வழிபடுவதை கண்டு இன்புறலாம். இடது பக்க பிரகாரத்தில் சிவன் பார்வதி தனித்தனி சந்நிதிகள் கொண்டுள்ளார்.

இத்தல ஈசனின் திருநாமம் அருள்மிகு கூடலீஸ்வரர்! இத்தல அம்பிகையின் திருநாமம் அருள்மிகு கூடலீஸ்வரி அம்பிகை.
இத்தல ஈசனின் பெயரிலேயே இவ்வூர் பெயரும் அமைந்துள்ளது சிறப்பு வாய்ந்தது! கூடலூர் என்ற பெயரே முற்காலத்தில் வழங்கப் பெற்று வந்துள்ளது குறித்து சான்று உள்ளது.
சிவ சந்நிதி எதிரே அழகிய வடிவில் நந்தி அமைந்துள்ளது.
பிரதோஷ சமயங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் வருவதுண்டு.
கோயிலின் முகப்பில் நடராஜர் மண்டபம் கம்பீரமான கல் மண்டபம் அமைந்து உள்ளது. மேற்கூரையில் (கல் மண்டபம்) மீன் சின்னங்கள் செதுக்கப்பட்டுள்ளது.



அருள்மிகு சிவாகம சுந்தரி உடனுறை அருள்மிகு நடராஜ மூர்த்தி உற்சவ மூர்த்திகளாக அருட்காட்சி அளிக்கின்ற அழகு அதி அற்புதம்!
மகா சிவராத்திரி, ஆனி திருமஞ்சனம், ஆருத்ரா தரிசனம் என முக்கிய நாட்களில் மகா அபிஷேகமும், மகா ஆராதனையும் நடைபெறும். கல் மண்டப முகப்பின் மீது ஒரு பக்கம் அருள் மொழி அரசு திரு முருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் திரு உருவச் சிலையும், ஆன்ம நேய அருள்வள்ளல் திருவருட் பிரகாச வள்ளலார் திரு உருவச்சிலையும் அமைந்து உள்ளது.
இருவருமே இதே மண்டபத்தில் ஆன்மீக சொற்பொழிவுகள் ஆற்றியுள்ளனர் என்பது கூடுதல் செய்தி
இத்தலத்தில் செந்தமிழ் இலக்கிய மன்றம் சார்பில் தெய்வத்தமிழ் நிகழ்வுகள் ஏராளம் நடைபெற்றுள்ளன.

இராஜகோபுரம் என்பது ஒவ்வொரு கோயிலுக்கும் முதன்மையாகும். இக்கோயிலில் இராஜகோபுரம் இல்லை. கோயில் பல ஆண்டுகளுக்கு முன்பு புதுப்பிக்கப் பட்டாலும் இக் கோயில் வளாகத்தில் ஒரு பெரிய சந்நிதி உள்ளது அது தொன்மை மாறாமல் சிதைந்து இருக்கிறது. அந்தக் கோயிலில் எந்த சாமியும் பிரதிட்சை செய்யப் பெறாமல் இருக்கிறது. இக்கோயிலே அழகாக தெளிவு பெற்றிருந்தும் அந்த சந்நிதியை மட்டும் ஏன் அப்படியே போட்டுள்ளனர்.
என்ன காரணத்தால் அந்த சந்நிதியை நெருங்க முடியவில்லை என்பது ஆய்வுக்குரியது மட்டுமின்றி அறிவிற்கு அப்பாற்பட்டவையாகவே உள்ளது.

திருவண்ணாமலையில் சித்தர்கள் தவம் புரிவதாக அறிவோம். அதே போல் இங்கும் சித்தர்கள் உறைந்திருக்கலாம்.

மன வளக் கலை சுவாமி வேதாத்ரி மகரிஷி இந்த கோயிலில் முதன் முதலில் செந்தமிழ் இலக்கிய மன்ற சார்பில் உரையாற்றி இருக்கின்றார் கந்த சஷ்டி வெகு விமர்சையாக நடைபெறும்.
நடு நாயகமாக ஸ்ரீ முத்துக்குமார சாமி சந்நிதி அமைந்துள்ளது.
ஆறுமுகங்களோடும், தெய்வானை மற்றும் வள்ளி சமேதராக மயில் மீது அமர்ந்தபடி அருட்காட்சி அளிக்கின்ற அழகே பேரழகு!
முருகனுக்கு அரோகரா என்று ஒவ்வொரு நாளும் பக்தர்கள் மனமுருக வழிபடுவதை காணலாம்.

திருப்புகழைப் பாடப்பாட வாய் மணக்கும்
எதிர்ப்புகளை முருகா உன் வேல் தடுக்கும்

என்ற பூவை செங்குட்டுவன் அவர்களின் அமுத கவிதைக்கு இத்தலமே சான்று!
ஸ்ரீ முருகப் பெருமானின் உற்சவ மூர்த்தியை விஷேஷ நாட்களில் அற்புதமாக அலங்காரம் செய்து வைத்து இருப்பார்கள்

உலகில் எதை எதையோ அழகு என்று காலத்தையும் நேரத்தையும் வீணாக்குகின்றோம் உண்மையான அழகை உலகிலேயே அதுவும் எந்த உலகத்திலும் காணக்கிடைக்காத பேரழகை கொண்டவன் இளங்குமரன் என்றுமே இளமை மாறாமலும் இனிய தமிழ்க் கடவுளாகவும் வசீகர புன்னகை சிந்தும் வாஞ்சைமிகு செல்வ முத்துக் குமார சுவாமியாக வீற்றிருக்கும் அருட்காட்சியை தரிசிக்க இரு கண்கள் போதாது.

முத்தமிழில் பாட வந்தேன்
முருகனையே வணங்கி நின்றேன்

என்ற இனிய பாடலுக்கு ஏற்ப இத்தல அருள் முருகனை பணிந்து வணங்கி போற்றி வழிபட்டால் அகிலத்தையே ஆளும் இராஜ யோகத்தையே பெறலாம்.
**கூடுதல் செய்தி:** வேண்டிய நலன்கள் பெற்று மகிழ ஒரு முறை இக்கோயிலுக்கு வருகை தந்தாலே போதும் படிப்படியாய் உயர இக்கோயில் படிகளை நம் விழி மலர்களால் அர்ச்சிப்போம்.

எழுதியவர்
சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர் சீனு செந்தாமரை
கடலூர்

# மாசி மகம்

வருணபகவான், பகைவன் ஒருவனால் தாளாத துயரடைந்தார். அதையறிந்த தேவகுரு வியாழபகவான் வருணனுக்கு மந்திர உபதேசம் செய்ய வந்தார். அவர் வந்த நேரம் இருள் நேரம். அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்-என்பதற்கேற்ப, இருள் நேரத்தில் இன்னல் நீக்க வந்த குருநாதரைப் பகைவன் எனத் தவறாக எண்ணிய வருண பகவான், குருநாதரைக் கொன்று விட்டார். அப்பாவத்தின் காரணமாக அப்போதே ஒரு பெரும்பிசாசு வடிவம் தோன்றி, வருணபகவானின் கைகளையும் கால்களையும் கழுத்தோடு சேர்த்துப் பாசத்தால் கட்டி, வருணபகவானைக் கடலில் வீழ் த்தியது. நெடுநாட்கள் அங்கேயே கிடந்து வருந்திய வருண பகவானுக்கு "மாசிமகம்" திருநாளன்று சிவபெருமான் எழுந்தருளித் தரிசனம் தந்து, வருணபகவானைப் பிடித்துக் கட்டியிருந்த பாசக்கட்டினை நீக்கி அருள் புரிந்தார். அந்த இடம் இன்றும் "பாசமறுத்த துறை" என வழங்கப் படுகிறது. பிரம்மஹத்தி முதலான பெரும்தோஷங்களை நீக்கும்துறை அது.

வருணபகவானே தனக்குப் பாசக்கட்டிலிருந்து விடுதலையளித்த சிவபெருமானிடம், "பரம்பொருளே! மாசி மகத்தன்று இங்கு வந்து நீராடுபவர்களுக்குப் பாசங்களை நீக்கி, முக்தி அருள வேண்டும்" என வரம் பெற்ற துறை இது. தில்லைக்கு வடகிழக்கே, வெள்ளாறு கடலோடு கலக்குமிடத்தில் இந்தப் "பாசமறுத்த துறை" அமைந்துள்ளது.





~ சொல்லின் செல்வர் PN பரசுராமன்

# ஓம் நமோ வாராகி!

முந்தைய இதழில் பள்ளூர் வாராஹியைப் பற்றி பார்த்தோம் வரும் இதழில் இன்னும் பல முக்கிய தலங்களைப்பற்றி பார்க்கலாம். அதற்கு முன்பாக வாராகம் என்றால் என்ன என்பதைப்பற்றி தெரிந்து கொள்வோம் வாருங்கள்.

## வாராகம்

வாராகம் என்பது இந்திய கலாச்சாரத்துடன் பின்னி பிணைந்துள்ளது. வேத வாழ்க்கையோடு தொடர்புடைய இது ஒரு விலங்கினம். "வாராக வழிபாடு" என்பது தொன்று தொட்டே நம் நாட்டில் இருந்து வரும் பழமையான கலாச்சாரம் வேத நெறியில் வாழ்ந்த மக்கள் போற்றி வணங்கிய ஒரு புனித அவதாரம் தற்போது நடக்கும் காலத்திற்கு வாராக கல்பம் என்று வேத காலத்திலேயே பெயர் சூட்டப்பட்டுள்ளது அப்படியானால் வாராகத்திற்கு அக்காலத்திலேயே எத்தனை முக்கியத்துவம் இருந்துள்ளது என்பதை நாம் புரிந்து கொள்ளலாம்.



வாராக அவதாரம் என்பதை நம் முன்னோர்கள் வாழ்த்தி வணங்கி போற்றி புகழ்ந்துள்ளனர். "வாராகம்" என்றால் சிறப்பானது என்றும் வெளியே நீட்டி கொண்டிருப்பது என்றும் பொருள்படும். அதாவது, வாரா என்றால் "சிறந்த" என்று பொருள் ஹ(க) என்றால் முன்னால் துருத்தி கொண்டிருப்பது என்று பொருள். மனிதர்களும் உயிரினங்களும் வாழத்தக்க வகையில் பூமியை வெளிக்கொண்டு வந்ததால் வாராகம் ஒரு அவதாரமாகவும் போற்றற்குரிய தெய்வமாகவும் விளங்குகிறது. இன்னும் சொல்லப்போனால் மிகப் பழமையான கலாச்சாரமாக கருதப்படும் மொஹஞ்சதாரோ காலத்திலேயே வாராக சின்னங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.எனவே, ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வாராக வழிபாடு நம்மிடையே இருந்துள்ளது இதன்மூலம் அறியப்படுகிறது. வாராகம் என்னும் மிருகம் இந்தியாவில்தான் இருந்துள்ளது. அதன் வலிமையே அதன் கொம்பில்தான் அடங்கியுள்ளது.

தமிழில் வாராகம் என்பது பன்றி ஆகும் தற்போது தெருக்களில் காணப்படும் பன்றி இல்லை. அதேப்போல இறைச்சிக்காக வளர்க்கப்படும் வெள்ளை பன்றியும் கிடையாது. இது காடுகளில் காணப்படும் ஒரு குறிப்பிட்ட வகை பன்றி . யானையை போன்று பலமான மிருகம் . அதேநேரத்தில் யாளியை போன்று பெரிய உருவத்துடன் காணப்படும் . சிங்கம் மற்றும் புலியை கண்டால் பலம் வாய்ந்த

யானை மிகவும் அச்சப்படும் காரணம் சிங்கம் மற்றும் புலியால் யானை கொல்லப்படுவதுண்டு ஆனால் வாராகி அப்படிக்கிடையாது சிங்கத்தையோ புலியையோ பார்த்து பயந்து நடுங்குவதில்லை சிங்கமும் புலியும் வாராகியைக் கண்டால் வாலை சுருட்டிக்கொண்டு திரும்பி ஓடும். பலம் வாய்ந்த மிருகம் என்பதோடில்லாமல் இதற்கு மற்றொரு உன்னதமான சிறப்பும் உள்ளது.

அதாவது சிவபெருமானும், நாராயணனும் வாராகத்தின் வடிவை எடுத்து பக்தர்களுக்கு அருள் பாலித்துள்ளனர். மதுரைக்கு அருகே குருவிருந்துறை என்னும் தலத்தில் தாயில்லாமல் தவித்த பன்றிக் குட்டிகளைக் கண்டு மனமிரங்கி தாமே தாய் பன்றியாய் வடிவெடுத்து அக்குட்டிகளை காப்பாற்றினார் சிவபெருமான். பூமி நீரில் மூழ்கிய போது காப்பாற்றுவதற்காக வாராக அவதாரம் எடுத்தார் நாராயணன். இந்த அவதாரத்துடன் பூமியை மீட்டெடுத்தார் . சிவபெருமான் அக்னி வடிவில் தோன்றியபோது அதாவது அடியைக் காண்பதில் யார் பெரியவர் என்று பிரம்மனுக்கும் விஷ்ணுவிற்கும் இடையே கடும் போட்டி ஏற்பட்டது . அப்போது வாராக அவதாரம் எடுத்தார் விஷ்ணு பகவான் . இவ்வாறு கடவுள்களால் அவதாரம் எடுக்கப்பட்ட வாராகத்தின் நற்குணம் என்ன தெரியுமா ?

எதையும் எளிதாக விட்டுக்கொடுக்கும் விசாலகுணம் இதற்கு உண்டு. ஆனால் தனது குட்டிகளுக்கு துன்பம் வரும் என்று தெரிந்தால் அடுத்த நொடிப்பொழுதே வெகுண்டு எழுந்து எதிரியை தாக்கி நிர்மூலமாக்கி விடும். இப்பேர்ப்பட்ட அருங்குணமுடைய வாராக அவதாரம் எடுத்தார் லலிதாம்பிகை அம்பாள் . வாராக அவதாரம் எப்படி தோன்றியது தெரிய வேண்டுமா? காத்திருங்கள் அடுத்த இதழில் பாப்போம்

ஓம் நமோ வாராகி!

~ திருமதி. அன்னபிரிய லட்சுமி



Call: 88702 88701

# திருப்பாடகம்

திருப்பாடகம் என்னும் திவ்ய தலத்தில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் சுமார் 25அடி உயரத்தில் ஆசி வழங்கும் தோரணையில் கம்பீர வடிவத்துடன் அழகே உருவான கோலத்தில் தரிசனம் தருகிறார்.

இந்த தலம் மகாபாரதக் கதையுடன் தொடர்புடையது. பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் மூளவிருக்கும் போரை விரும்பாத பீஷ்மர், துரோணர் ஆகியோரின் யோசனைப்படி, பாண்டவர்களின் தூதராக ஸ்ரீ கிருஷ்ணர் கௌரவர்களின் சபைக்கு செல்கிறார்.

இதை முன்கூட்டியே அறிந்த துரியோதனின் மாமா சகுனி, நடைபெறப்போகும் போரில் ஸ்ரீ கிருஷ்ணர் பாண்டவர்களுக்குத் துணையாக இருந்தால் அவர்களை வெற்றி பெற இயலாது; எனவே கிருஷ்ணரை ஒழித்துவிட்டால் கௌரவர்களுக்கே வெற்றிகிட்டும் என எண்ணி ஒரு திட்டத்தைத் தீட்டுகிறார்.



அந்தத் திட்டத்தின்படி, தூதராக வருகின்ற கிருஷ்ணன் அமர்வதற்கு ஓர் அலங்கார ஆசனத்தை தயார்செய்து, அதற்குக் கீழே ஆழமான குழியை வெட்டி, அதன்மேல் ஒரு கம்பளத்தை மூடி அதன்மீது ஆசனத்தைப் போடுகின்றனர், கிருஷ்ணர் வந்து அதில் அமர்ந்தால் குழிக்குள் விழுவார். அப்போது, குழிக்குள் இருக்கும் மல்யுத்த வீரர்கள் கிருஷ்ணரை கொன்று விடுவார்கள் என்பதே அந்தத் திட்டம்!
இதையெல்லாம் அறிந்த மாயக்கண்ணன் ஆசனத்தில் அமர, அவர் குழிக்குள் விழுகிறார். விஸ்வரூபம் எடுத்து அங்கு மறைந்திருக்கும் வீரர்களைக் கொன்று, நொடியில் மேலே உள்ள ஆசனத்தில் வந்து அமர யாராலும் காணமுடியாத பிரகாச ஜோதியாய் விளங்கி, மாயப்புன்னகை புரிகிறார்.
அதே விஸ்வரூப கோலத்தில் ஆயிரம் கோடி சூர்யப் பிரகாசத்தோடு இந்த கருவறையில் காட்சி கொடுப்பதால் இந்த ஸ்ரீ கிருஷ்ணருக்கு பாண்டவ தூத பெருமாள் என்கிற அழகிய திருநாமம் சூட்டி பக்தர்கள் மகிழ்கின்றனர்.

நியாயத்தின் பக்கம் நின்று தூது சென்று வெற்றி தேடித்தந்த இந்த பாண்டவ தூத பெருமாளை மெய்யும் மனமும் ஒருசேர சேவிக்க, பக்தர்களின் துன்பங்கள் விலகி வெற்றிமேல் வெற்றி கிட்டும் என்ற நம்பிக்கை நிலவுகிறது.

திருப்பாடகம் என்பதன் பொருளைப் பார்க்கும் போது 'திரு' என்றால் சிறந்தது; 'பாத' என்றால் பெரியது; 'அகம்' என்றால் இருப்பிடம்! சிறந்த, விஸ்வரூபத்தின் இருப்பிடம் என்பதே திருப்பாடகம் என்றாகி இந்த

தலத்தின் பெயராய் விளங்குகின்றது.

பாமா, ருக்மணி தாயார் என்கின்ற இருபெரும் தேவியரோடு காட்சிதரும் பாண்டவ தூத பெருமாளின் தரிசனம் காண பக்தர்கள் குவிந்த வண்ணம் உள்ளனர்.

கோவில் நகரமான காஞ்சிபுரத்திலிருந்து செய்யாறு செல்லும் வழியில் அமைந்துள்ள திருத்தலமான இந்த திருப்பாடகத்தில் எழுந்தருளும் மகாபாரத நாயகனை வேறெந்த தலத்திலும் தரிசிக்க முடியாது என்பதே இந்த திவ்யதேசத்தின் தனிப்பெரும் சிறப்பாகும்

தேனி மாவட்டம், பெரியகுளத்திற்கு அருகில் உள்ள தேவதானம் பட்டியில் அமைந்துள்ளது, மூங்கிலணை காமாட்சி அம்மன் ஆலயம்.

மேற்கு தொடர்ச்சி மலைத்தொடரில் உற்பத்தியாகும் மஞ்சளாற்றில் ஒரு பெட்டி மிதந்து வந்தது; அந்தப் பெட்டியில் குழந்தை வடிவாய் இருந்தவள் இந்த அம்மன்! ஆற்று வெள்ளத்தில் மிதந்து வந்த பெட்டி ஆற்றோரம் அடர்ந்து வளர்ந்திருந்த மூங்கில் புதரால் அணையப்பட்டு, அதாவது தடுக்கப்பட்டு அந்தக் குழந்தையை இப்போதுள்ள குடிசையில் வளர்த்தாள் ஒரு மூதாட்டி!
தேஜஸான முகம், தீர்க்கமான கண்கள் என தெய்வீக ஒளி பொருந்திய அந்தக் குழந்தை வளர்ந்து பருவ வயதை எட்டியது.

குழந்தையை வளர்த்து வந்த காமக்காள் என்னும் அந்த மூதாட்டி, குழந்தையின் தெய்வீகத் தன்மை கருதி அந்த குடிசைக்குள்ளேயே வைத்துப் பாதுக்காத்தார்.
தன் தாய் குடிசைக்குள்ளே யாரையோ ரகசியமாய் வைத்திருப்பதை உணர்ந்த கட்டிளங்காளையான காமக்காளின் மகன் உள்ளே இருக்கும் பெண்ணை, தான் பார்க்க விரும்பினான். அது விபரீதத்தில் முடியும் என காமக்காள் தடுத்தும் கேளாமல் ஒரு நாள், குடிசையின் கதவைத் திறந்து. அந்த கன்னியின் முகத்தைப் பார்க்க, ஒளி பொருந்திய கண்களின் தீட்சண்யம் தாளாமல் கண்கள் குருடாகி இறந்தான்.

அன்று முதல் இன்று வரை யாரும் அந்த பெண்ணைப் பார்த்ததில்லை. அந்த குடிசையே கருவறையானது. அந்தப் பெண் தான் காமாட்சியம்மன்.
சில நூற்றாண்டுகளுக்கு முன்னால் பூஜை செய்வோருக்கு இடையில் ஏற்பட்ட பிரச்சனையால் காமாட்சிப்புல் வேய்ந்த குடிசையும் மண்டபமும் மூடப்பட்டு, இன்றுவரை பூட்டப்பட்ட கதவுக்கே பூஜைகள் நடந்து வருகிறது.
கருவறையிருந்தும் தரிசனம் தராத அந்த கன்னி தெய்வத்தை கதவின் வடிவிலேயே அனைவரும் வணங்கி, கருணையை வாரி வழங்குகிறாள் காமாட்சி அம்மாள்.

~ ரா. பன்னீர்செல்வம்

# சர்வம் ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணம்

அவர் பிரபல ஜோதிடர். அவர் ஒருவருடைய ஜாதகத்தை கணித்து ஒரு விஷயத்தை சொன்னால், அது அந்த பிரம்மாவே சொன்னது போல. அந்தளவு ஜோதிடத்தில் பாண்டியத்யம் நிபுணத்துவமும் பெற்றவர். எனவே அவரை சந்தித்து தங்கள் எதிர்கால பலன்களை தெரிந்துகொள்ள பல ஊர்களில் இருந்தெல்லாம் மக்கள் வருவார்கள்.



தனது எதிர்காலம் குறித்தும் மிகவும் கவலை கொண்ட ஒரு ஏழை கூலித் தொழிலாளி அந்த ஜோதிடரை சந்திக்க வந்தான்.

"நான் மிகவும் வறுமையில் இருக்கிறேன். கடன் பிரச்சனை வேறு என்னை வாட்டுகிறது. எனக்கு இரண்டு பெண் குழந்தைகள் வேறு. அவர்களை எப்படி கரையேற்றப் போகிறேன் என்று தெரியவில்லை. நான் நன்றாக வாழ ஏதாவது வழி இருக்கிறதா? என்று என் ஜாதக த்தை பார்த்துச் சொல்லுங்கள்" என்று தன் ஜாதகத்தை கொடுத்தார்.

ஜோதிடரும் அந்த ஏழை தொழிலாளியின் ஜாதகத்தை கணிக்கத் தொடங்கினார். சோழிகளை உருட்டிப்போட்டார். கட்டங்களை ஆராய்ந்தார். ஒரு கட்டத்தில் ஜோதிடரின் முகம் சுருங்கியது.

பிறகு தொழிலாளியிடம், "ஐயா எனக்கு இன்றைய தினம் மிகவும் முக்கியமான பணி ஒன்று இருக்கிறது. உங்கள் ஜாதகத்தை சற்று விரிவாக ஆராயவேண்டி இருக்கிறது.

எனவே அது என்னிடம் இருக்கட்டும். நீங்கள் இன்று போய் நாளை இதே நேரத்திற்கு வாருங்கள். நான் உங்களுக்கு அனைத்தையும் சொல்லிவிடுகிறேன்" என்றார்.

"சரிங்க ஐயா நான் நாளைக்கு வர்றேன். இப்போ பார்த்ததுக்கு எதாச்சும் தரணுமா ஐயா?" என்று ஜோதிடரிடம் கேட்டார்.

"அதெல்லாம் ஒன்னும் வேண்டாம். நாளைக்கு வரும்போது கொடுங்க போதும்""

"ரொம்ப நன்றிங்க ஐயா' நான் நாளைக்கு வர்றேன்"

தொழிலாளி அங்கிருந்து புறப்பட்டார்.

அப்போது அங்குவந்த ஜோதிடரின் மூத்த மகள், "அப்பா ஏன் அவர்கிட்டே அவசர வேலை இருக்குன்னு சொல்லி அனுப்பினீங்க? இன்று எனக்கு வேலை எதுவும் இல்லை. முழுக்க முழுக்க வர்றவங்களுக்கு ஜாதகம் தான் பார்த்து பலன் சொல்லப்போறேன்னு சொன்னீங்க?" என்று கேட்டாள்.

அதற்கு ஜோதிடர்,"அம்மா அவரது ஆயுட்காலம் இன்றிரவு முடியப்போகிறது. அவரது ஜாதகம் உணர்த்துவது அதைத் தான். மேலும் சோழி உருட்டிகூட பார்த்துவிட்டேன்.

பரிகாரம் செய்வதற்கு கூட அவருக்கு அவகாசம் இல்லை. இதை அவரிடம் தெரிவிக்க மனமில்லை. அதனால்தான் பொய் சொல்லி அவரை இங்கிருந்து அனுப்பினேன், பாவம்.." என்றார்.

இதற்கிடையில் அந்த தொழிலாளி தனது ஊரைநோக்கி வயல்வெளிகளுக்கு இடையே நடந்து கொண்டிருந்தார்.



அப்போது திடீரென வானம் மேகமூட்டமாகி இருள் சூழ்ந்தது. சிறிது நேரத்தில் மழைதூற ஆரம்பித்து வலுப்பெற்று, இடியுடன் பலத்த மழை கொட்டியது.

வயல்வெளிக்குள் ஒதுங்க இடமின்றி, ஓட்டமும் நடையுமாக அந்த தொழிலாளி விரைந்து நடக்க ஆரம்பித்தான். சற்று தூரத்தில் ஏதோ ஒரு ஆள் அரவமற்ற கோவில் போன்ற கட்டிடம் ஒன்று தென்பட, அதை நோக்கி ஓடினான் தொழிலாளி.

அது ஒரு பாழடைந்த கிருஷ்ணன் கோவில். அங்குசென்று மழைக்கு ஒதுங்கினான் அந்த தொழிலாளி.

மண்டபத்தில் நின்றிருந்த அவர் சிதிலமடைந்து கிடக்கும் கோவிலின் நிலைமையைக் கண்டு மிகவும் வருந்தினார். "கிருஷ்ணன் குடியிருக்கும் கோவில் இப்படி கவனிப்பாரற்று சிதிலமடைந்து காணப்படுகிறதே' நான் மட்டும் ஏழையாக இல்லாமல் பணவசதியுடன் இருந்தால் இந்த கோவிலைப் புதுப்பித்து கும்பாபிஷேகம் செய்துவிடுவேன் என்று நினைத்துக்கொண்டார்.

அத்துடன் அவர் மனஓட்டம் நிற்காமல் கிருஷ்ணன் கோவிலை தான் புதுப்பிப்பதாக மானசீகமாக நினைத்துக்கொண்டார்.

கோபுரம், ராஜகோபுரம், பிராகாரங்கள், மண்டபங்களை திருப்பணி செய்து சீரமைத்தார். கும்பாபிஷேகத்திற்கு புரோகிதர்களை அமர்த்தி வேதமந்திரங்கள் முழங்கதிருக்குடத்தை ஊர்வலமாக எடுத்துவந்து கும்பாபிஷேகம் நடத்தி, கருவறையில் உறையும் இறைவனை வணங்குவதுபோல் தனது சிந்தனையை ஓடவிட்டார்.

அந்த சிந்தனையினூடே அவர் மண்டபத்தின் மேற்பகுதியைப் பார்த்தபோது, அங்கே அவரது தலைக்குமேல் நல்ல பாம்பு ஒன்று படமெடுத்து அவரை கொத்த தயாராக இருப்பது கண்டு அதிர்ச்சியடைந்தார். வினாடி கூட தாமதிக்காமல் அம்மண்டபத்தை விட்டு வெளியே ஓடினார்.

இவர் வெளியே வந்தது தான் தாமதம், அடுத்த நொடி ஒரு பேரிடி விழுந்து அந்த மண்டபம் இருந்த பகுதி அப்படியே நொறுங்கி தூள் தூளானது. அதில் ஒரு கல்லானது இவர் கால் மேல் விழுந்து தெறிக்க சிறு காயத்துடன் இவர் தப்பினார். நாகத்தை கண்ட அதிர்ச்சியிலிருந்தே மீளாத அந்த தொழிலாளி மேலும் அதிர்ச்சியில் உறைந்துபோனார். அப்போது சரியாக இரவு ஏழரை மணி.

வீட்டுக்கு சென்று தன் மனைவி மக்களிடம் தான் தப்பித்த கதையை திகிலுடன் கூறினார்.

மறுநாள் மாலை வழக்கம்போல ஜோதிடரை சந்திக்க சென்றார். தொழிலாளியை பார்த்த ஜோதிடருக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை.

அவரை வரவேற்று அமரவைத்துவிட்டு ஒரு வேளை தான் சரியாக பலன் கணிக்கவில்லையா என்ற சந்தேகத்துடன் மீண்டும் அந்த தொழிலாளியின் ஜாதகத்தை ஆராய்ந்தார்.

ஜோதிட நூல்களை, ஓலைச் சுவடிகளை மீண்டும் புரட்டினார். அவர் கணக்கு சரியாகவே இருந்தது. பின் அவர் எப்படி பிழைத்தார்?

இதுபோன்ற கண்டத்திலிருந்து தப்பிக்க வேண்டுமென்றால், அந்த நபர் கிருஷ்ணன் கோவில் ஒன்றைக் கட்டி அதற்கு கும்பாபிஷேகம் செய்த புண்ணியம் பெற்றிருக்கவேண்டும் என்று ஜோதிட நூல்களில் பரிகாரம் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால் இவரோ பரம ஏழை. அந்த பரிகாரத்தை இவர் சொல்லியிருந்தாலும் அதை இவரால் செய்திருக்க முடியாது. இவரால் எப்படி கோவில் கட்டி கும்பாபிஷேகம் செய்யமுடியும்? அதுவும் ஒரு இரவுக்குள்? இப்படி பலவாறு சிந்தித்தபடி, "நேற்றிரவு என்ன நடந்தது?" என்று அந்த தொழிலாளியிடம் கேட்டார்.

ஜோதிடர் தான் சென்றபோது மழை பெய்ததையும், அப்போது மழைக்கு ஒரு பாழடைந்த கிருஷ்ணன் கோயில் பக்கம் தான் ஒதுங்கியதையும் கூறினார்.

மேற்கொண்டு என்ன நடந்தது என்று ஜோதிடர் ஆர்வத்துடன் கேட்க, இவர் அந்த சிதிலமடைந்த ஆலயத்தை பார்த்த வருத்தமுற்றதாகவும், பணமிருந்தால் கும்பாபிஷேகம் செய்து வைக்கலாமே என்று தான் கருதியதாகவும் கூறினார்.

ஜோதிடருக்கு அடுத்த நொடி அனைத்தும் விளங்கிவிட்டது. இந்த தொழிலாளி மனதளவில் செய்ய நினைத்த கிருஷ்ணாலய புனருத்தாரணமும் கும்பாபிஷேகமுமே அவருக்கு முழுமையான பலன்களை தந்து கிருஷ்ணனருளால் அவரது விதி மாற்றி எழுதப்பட்டதை உணர்ந்துகொண்டார்.

"இது உங்களுக்கு மறுஜென்மம். அதுவும் பகவான் கொடுத்த ஜென்மம். இனி உங்களுக்கு எந்த குறையும் இருக்காது போய் வாருங்கள்" என்று அவரை வழியனுப்பி வைத்தார்.

ஆக, போகிற போக்கில் நம்மிடம் தோன்றும் நல்ல சிந்தனை கூட நமது விதியை மாற்ற வல்லவை. எனவே எப்போதும் நல்லதையே நினைக்கவேண்டும். அந்த தொழிலாளிக்கு அடிப்படையிலேயே நல்ல சிந்தனையும் பக்தியும் இருந்ததால் மழைக்கு ஒதுங்கிய இடத்தில் அப்படி ஒரு சிந்தனை தோன்றி அதன் மூலம் விதி மாற்றி எழுதப்பட்டது.

நீங்கள் கிருஷ்ண பக்தி செயல்களில் தொடர்ந்து ஈடுபட்டு வரவேண்டும்.

கிருஷ்ண பக்தி என்பது மிக மிக எளிமையானது. ஆனால், தலையெழுத்தையே மாற்றவல்லது. அந்த தொழிலாளி அன்றிரவு இடி தாக்கி மரணமடையவேண்டும் என்பது விதி. ஆனால் அவர் மனதால் செய்த கிருஷ்ண பக்தி அவரை கடைசி நேரத்தில் காப்பாற்றிவிட்டது

இதன் பெயர் தான் வினை சுருங்குதல். அதாவது அனுபவித்தே தீரவேண்டும் என்ற விதியை மாற்றுவது. தலைக்கு வருவதை தலைப் பாகையோடு போகச் செய்யும் சக்தி கிருஷ்ண பக்திக்கு உண்டு.

~ முகநூல் பதிவு


Yearlong Offerings to Your Ancestors Invoke Immediate & Lasting Relief for You, Your Children and Your Ancestors

Call: 88702 88701

# சிவராத்திரி –‘சிந்தையிலே சிவம்’

இறைவன் ஈசனுக்கு உகந்த ஒரே ராத்திரி சிவராத்திரியாகும். மாசி மாதத்தில் அமாவாசைக்கு முன் தினம் வருகின்ற நாளே மகா சிவராத்திரி என்னும் சிறப்பைப் பெற்றுள்ளது.

**இந்த சிவராத்திரியன்று.....**

தன்னையறியாமல் ஒரு குரங்கு, மரத்தின் மீது அமர்ந்து இரவு முழுவதும் தூங்காமல், மரத்தில் இருந்த வில்வ இலைகளை ஒவ்வொன்றாய் பறித்து கீழே போட அந்த வில்வ இலைகள் அனைத்தும் கீழே இருந்த சிவலிங்கத்தின் மீது விழுந்ததாம். இந்த நிகழ்வு நடந்த நாள் சிவராத்திரி தினம் என்பதால், அந்த குரங்குக்கு புண்ணியம் ஏற்பட்டதாம். எப்படிப்பட்ட புண்ணியம்? அடுத்த பிறவியில் ஒரு சக்ரவர்த்தியாக பிறக்கும் புண்ணியம் கிட்டியதாம். அவர்தான் முசுகுந்த சக்ரவர்த்தி!
இப்படிப்பட்ட சிவராத்திரி விரதத்தை நாம் தெரிந்தே மேற்கொண்டால், மனமும் மெய்யும் ஒரு சேர விரதமிருந்து வழிபட்டால் நற்பலன்கள் நம்மை நாடிவரும் என்பது ஆன்றோர் வாக்கு.

## அன்னதானம் கூடாது

காலையிலிருந்து விரதம் இருந்து இரவு சிவாலயத்தில் நடைபெறும் நான்கு கால பூஜைகளையும் சிவசிந்தனையோடு தரிசித்து, காலையில் இல்லம் சென்று நீராடி, மீண்டும் ஆலயத்தில் நடைபெறும் ஆராதனையைக் கண்டு தரிசித்த பின்னரே உணவினை ஏற்க வேண்டும். இதுவே சிவராத்திரி விரதம்.

சிவராத்திரியன்று ஆலயத்தில் அன்னதானம் செய்வதோ பக்தர்கள் அதை வாங்கி உண்ணுவதோ இருதரப்புக்குமே பயன் அளிக்காது!

எனவே, உறக்கமும் உணவும் இல்லாமல் சிவராத்திரியன்று சிவசிந்தனையோடு சிவதரிசனம் காண்பதே சிறப்பு.



~ ரா. பன்னீர்செல்வம்

# படிப்பில் வெற்றிபெற உதவும் சரஸ்வதி யந்திரம்

நமக்கு அறிவு, ஞானம், கலைகள், கல்வி மற்றும் பேச்சு ஆகியவற்றை தந்தருளும் ஆற்றல் அன்னை சரஸ்வதி தேவிக்கு உண்டு. மாணவர்கள் கல்வியில் எந்த தடையும் வராமல் சிறந்து விளங்கவும் படிப்பில் நல்ல மதிப்பெண்ணுடன் தேர்ச்சி பெறவும் இந்த சரஸ்வதி எந்திர வழிபாடு உதவுகிறது. ஓவியம், சிற்பம், நாட்டியம், பாடல், இசை மற்றும் நடிப்பு போன்ற நுண் கலைகளை திறம்பட பயிலவும் இசை, நடனம் போட்டிகளில் வெற்றியை குவிக்கவும் இந்த சரஸ்வதி எந்திர வழிபாடு உதவுகிறது. மேடை பேச்சாளர்கள் திறம்பட பேசி மக்களை கவரவும் இந்த எந்திரம் வழிவகை செய்கிறது. தனது வாக்கை மூலதனமாக கொண்டு தொழில் செய்பவர்களான வழக்கறிஞர்கள், ஆசிரியர்கள் மற்றும் பேராசிரியர்கள் இந்த எந்திரத்தை தொடர்ந்து பூஜித்து வர வாக்கில் வெற்றிகிட்டும். ஜோதிட தொழிலில் இருப்பவர்களுக்கு வாக்கு பலிதம் உண்டாகும். இவ்வளவு பயன் பொருந்திய சரஸ்வதி எந்திரத்தை வடகிழக்கில் உள்ள பூஜை அறையில் வைத்து தினமும் காலை 108 முறை கீழே உள்ள மந்திரத்தை மாணவர்கள் கூறி வந்தால் படிப்பில் வெற்றி கிடைக்கும்.

**சரஸ்வதி மந்திரம்:**

ஓம் ஸ்ரீம் ஹிரீம் சரஸ்வத்யை நம.




~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்

# மூலிகை ரகசியம்

## தும்பை (Leucas aspera)

நம் கண்ணில் படுகின்ற பச்சைத்தாவரங்கள் அனைத்திலும் நோய்தீர்க்கும் ரகசியம் மறைந்து கிடப்பதைக் கண்டறிந்து அவற்றை மூலிகைகள் என்று நமக்கு அறிமுகம் செய்தவர்கள் சித்தர்பெருமக்கள்!

அந்த வகையில் இன்று மூலிகை ரகசியம் பகுதியில் நாம் பார்க்கவிருப்பது தும்பை 'எனும் மூலிகை ஆகும்!



மிகமிக சாதாரணமாக சாலையோரங்கள், வயல்வெளிகள் என அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் காணப்படும் ஒரு குறுஞ்செடி வகையைச் சார்ந்தது இந்த மூலிகைத் தாவரம் தண்டு, காம்பு, இலை அனைத்தும் பச்சை நிறத்தில் காணப்படும் இந்த செடி, அழகிய மென்மையான, வெண்மையான சிறு மலர்களுடன் பூத்திருப்பது தனி அழகாகும்.

தும்பையில் சிறுதும்பை, பெருந்தும்பை, நிலத்தும்பை என பல வகைகள் உள்ளன. வடிவம் சிறிதாயினும் இந்தத் தாவரத்தின் மருத்துவ குணம், மிகவும் பெரியது, இது ஒன்றே இந்த மூலிகையின் முக்கியத்துவத்தை உணர்த்தும்!

### குணப்படுத்தும் நோய்கள்:

சாதாரண தலைவலி, அடிக்கடி மயக்கம் வருவது, முதற்கொண்டு கல்லீரல், நுரையீரல் போன்றவற்றை விஷம் தாக்காமல் காப்பது என பல நோய்களுக்கு மருந்தாகும் தும்பையானது, விஷப்பாம்புகள் கடித்து, வாயில் நுரைதள்ளி மரணத்தை நெருங்கும் மனிதர்களைக் கூட பிழைக்க வைக்கும் சக்தியைப் பெற்றதாகும். சிறு பூச்சிகள், வண்டுக்கடி போன்றவற்றால் ஏற்படும் விஷத்தன்மை ரத்தத்தில் கலந்தால் அதை முறிக்கும் அற்புத ஆற்றல் வாய்ந்ததே இந்த அதிசிய மூலிகை்

### பயன்படுத்தும் முறை:

இதன் இலைகளைக் கசக்கி சாறு பிழிந்து குடிக்கலாம் சாற்றினை பாலில் கலந்து காலை, மாலை என இரு வேளைகள் குடிப்பதனால், தலைவலி, மயக்கம் ஆகியவை தீரும்.

தும்பை சூரணத்தை 2 கிராம் அளவு எடுத்து பாலில் கலந்து 10 நாட்கள் குடிக்க, குறட்டை நீங்கும். இதனை சாறெடுத்தும் சூரணம் செய்தும் சாப்பிட, பல நோய்கள் குணமாகும்.

சாதாரண செடியாய் காட்சிதரும் தும்பையானது சாவைக்கூட தடுக்கும் தன்மை வாய்ந்தது. இதனை பயன்படுத்தி நலம்பெற்று வாழ்க!

~ ரா. பன்னீர்செல்வம்

# கயிலை வாசனைக் காண்போம்

இறைவன் ஈசன் இப்பூவுலகெங்கிலும் அருள்புரிந்து மனித இனத்தை நல்வழிப்படுத்த வேண்டும் என்பதற்காகவே நம் முன்னோர்கள் இறைவன் உறையும் ஆலயங்களை ஆங்காங்கே அமைத்து வழிபட்டனர்.

ஆனால், அப்படி பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் சோழ மன்னனால் நிர்மாணிக்கப்பட்ட ஒரு சிவாலயம் இன்று மக்களால் கண்டுகொள்ளப்படாமல் இருப்பது வேதனை அளிப்பதாகவே உள்ளது.

ஆனால், தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் தருணத்தை இறைவன் தானே தீர்மானிப்பான் என்பார்கள்! அப்படி ஒரு நல்ல தருணம் ஒரு சிவாலயத்திற்கு வந்துள்ளது.

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் வட்டம், கேசாபுரம் என்னும் கிராமத்தில் கைலாச ஈஸ்வரமுடைய மகாதேவர் ஆலயம் தான் இன்று மெல்ல மெல்ல மெய்யன்பர்கள் பார்வைக்குப் பட்டு, இறைவனின் இன்னருளை வெளிப்படுத்தத் தொடங்கியுள்ளது.

சுமார் 1200 ஆண்டுகளுக்கு முன்னால் முதலாம் குலோத்துங்க சோழனால் நிறுவப்பட்ட ஆலயம் இது! ஆலயம் உருவான வரலாறு பற்றி தெரிந்துக்கொள்வோம்.

இந்த தலத்திற்கு அருகேயுள்ள தக்கோலத்தில் அருள்புரியும் சிவனை வணங்க முதலாம் குலோத்துங்க சோழனும் அவனது மனைவி ஏழுலகமுடையாளும் வந்தனர். தக்கோலம் சிவனை வணங்கிய அவர்கள் அருகிலே இருந்த பஞ்சாட்சரகிரியில் அருள்புரியும் கூடல் சங்கமேஸ்வரரை வழிபட நினைத்தனர்.

இந்த இறைவனுக்கு கூடல் சங்கமேஸ்வரர் என்ற பெயர் எப்படி வந்தது என எண்ணுங்கால், இங்கு தான் கூவம் நதி பிறக்கிறது அந்த கூவநதியும் குசஸ்தலை நதியும் சிறிய நதியான கல்லாறும்



ஒன்றுகூடி சங்கமிக்கும் இடத்தில் பஞ்சாட்சிரகிரி அமைந்திருந்தார் இறைவனுக்கு கூடல் சங்கமேஸ்வரர் என்னும் பெயர் வந்தது.



இந்த இறைவனை தரிசனம் செய்துவிட்டு வந்த சோழ மன்னனுக்கு கைலாயத்தில் அருள்புரியும் சிவனுக்கு இங்கு ஒரு ஆலயம் அமைக்கவேண்டும் என்ற உந்துதல் ஏற்பட்டு, அதன்படி உருவானதே இந்த கைலாய ஈஸ்வரமுடைய மகாதேவர் திருக்கோயில்.

### ஆலய சிறப்புகள்:

சோழர் கால கட்டடக்கலைக்கு இந்த ஆலயம் எடுத்துக்காட்டை திகழ்கிறது.
தத்ரூபமாய் - உயிரோட்டமாய் அமைக்கப்பட்டுள்ள சிற்ப வேலைகள், கருங்கல் கட்டுமானங்கள் என சோழர்கால சிற்பப் பெருமை கண்முன்னே வந்து களி நடனம் புரிவதைக் காணமுடிகிறது.
சோழர்கால கட்டட பாணிப்படி, கருவறை விமானம் உயர்ந்து விளங்குகின்றது. பொதுவாக, கோபுரம், விமானம் என அனைத்திலும் அடிப்பகுதி மட்டுமே கல்காரத்தால் ஆனதாக இருக்கும். அதாவது, கற்களால் கட்டப்பட்டிருக்கும். கோபுரத்தின் மேல் பகுதி எல்லாம் சுதையால் ஆனதாகவும் சுதைச் சிற்பங்களை தாங்கியும் இருக்கும். ஆனால், இவ்வாலயத்தில் விமானம் முழுவதுமே கருங்கற்களால் அமைக்கப்பட்டுள்ளது தனிச் சிறப்பாகும்.
கருவறை கோஷ்டத்தில் உள்ள விநாயகர், தட்ஷிணாமுர்த்தி, லிங்கோத்பவர், பிரம்மா, விஷ்ணு, துர்க்கை ஆகிய சிற்பங்கள் புடைப்புச் சிற்பம் போல் அல்லாமல் முப்பரிமாண நிலையில் காட்சியளிப்பது சிற்பக்கலைக்கு சிறந்த உதாரணம் என புகழப்படுகிறது.

### இறையருள்:

ஆலயத்திற்கு வருவதற்கும் சரியான பாதையில்லாமல் அடைந்துகிடத்த ஆலயத்தினை நல்ல உள்ளம் கொண்ட சிவத்தொண்டர்கள் ஒருவாறு சீரமைக்க, சிற்சில அன்பர்கள், இந்த ஆண்டவனை வணங்கி வழிபட்டனர் என்ன ஆச்சர்யம்!? கைலாய ஈஸ்வரமுடைய மகாதேவர் ஆயிற்றே! அன்பர்கள், கைலையிலேயே வந்து தரிசனம் கண்டு வேண்டியது போல் அவர்தம் குறைகளை அந்த நொடியே தீர்த்து வைத்தார். இங்கு இவ்வளவு இறையருளா? என வியந்த பக்தர்கள் வாய்மொழியாய் மற்றோரிடம் சொல்ல, இப்போது பல பகுதியிலிருந்தும் மக்கள் வந்து வழிபட ஆரம்பித்துள்ளனர்.

இந்த ஈசனை தரிசனம் செய்துவிட்டு சென்றால் அவர்களது கனவில் காட்சி தருகிறாராம், இந்த கருணைக் கடல்!

வாய் பேச முடியாத குழந்தைகளுக்கு சிவனுக்கு அபிஷேகம் செய்த தேனைக் கொடுக்க இன்று வரை ஐந்து குழந்தைகள் நன்றாக பேச ஆரம்பித்துள்ளனர்.
குழந்தை இல்லாத பல தம்பதியரும் இந்த இறைவன் அருளால் மக்கள் செல்வத்தை அடைந்து

மகிழ்ந்துள்ளனர்!
இப்படி, தன்னை அண்டி வருவோர்க்கு அனுக்கிரகம் செய்து அருள்புரியும் அற்புத ஆற்றல் பெற்றவரே இந்த கைலாய ஈஸ்வரமுடைய மகாதேவர்!

இந்த ஆலய கருவறை விமானத்தில் இன்னொரு சிறப்பும் உள்ளது. இது கஜ பிருஷ்டம் என்னும் வகையில் கட்டப்பட்டது. தமிழில் தூங்கானை மாடம் என்பார்கள். அதாவது, யானை படுத்திருக்கும் போது அதன் பின்பாகம் உள்ளது போல் தெரிவதே இந்த கஜபிருஷ்ட விமான அமைப்பாகும்.
இங்கு ஓடுகின்ற குசஸ்தலை ஆறு உத்திரவாகினியாக ஓடுகிறது. அதாவது, வடக்கு நோக்கி ஓடுகிறது, காசியில் கங்கை வடக்கு நோக்கி ஓடுகிறது. வடக்கு நோக்கி ஓடும் ஆறுகளில் குளித்தால் பாவம் தொலையும். எனவே இது புண்ணிய நதியாய் இங்கு பாய்கிறது.
எனவே, இவ்வாலயம் தென் காளஹஸ்தி, கயா, காசி என கல்வெட்டில் உள்ள சொற்றொடரை நிரூபித்த வண்ணம் உள்ளது.

பொன்னம்பல நாதன் உறைக்கின்ற இந்த புனித ஆலயம் புதுப்பொலிவு பெற மெய்யன்பர்கள் தோள் கொடுத்து திருப்பணியாற்ற வேண்டும் என்பதே கேசாபுர மக்களின் எண்ணமாய் உள்ளது.



~ ரா. பன்னீர்செல்வம்

# சித்தர் பூமி இராயக்கோட்டை

நமது "சத்வித்யா" நேயர்களுக்கு இந்த இதழில் ஒரு சக்திவாய்ந்த - புதுமையான சித்தர் பூமியை அறிமுகம் செய்யவிருக்கிறோம்

ஆம்! இந்த சித்தர் பூமியில் ஜீவசமாதி இல்லை. ஆனால், ஒரு மகாயோகியின் ஜீவன் உலவிக்கொண்டிருக்கிறது, அவருடைய தத்துவ போதனைகள் இங்கே பலராலும் பின்பற்றப்படுகிறது. ஆன்மீகத் தேடலுக்கு ஆனந்தப் பாதை காட்டிய அந்த மகானின் அற்புதங்கள் அனைத்தும் மழுங்காத கூர்முனையாய் இன்னமும் மக்கள் மனதை உழுது கொண்டிருக்கிறது.



கிருஷ்ணகிரிக்கு அருகில் உள்ள ஒப்பற்ற தலமான ராயக்கோட்டை சித்தர் பூமி என்ற சொல்லுக்கு மிகவும் பொருத்தமானது அதைவிட, புராண , வரலாற்று பெருமைகளை உள்ளடக்கிய - புகழ்ப் பெற்ற ஊரே இந்த இராயக் கோட்டை!

மாமன்னர் கிருஷ்ணதேவராயரோட வாரிசுகள் ஆண்ட போது மலைகள் நிறைந்த இந்த ஊரில் ஒரு மலையின் மீது கோட்டை ஒன்றை அழகாக வடிவமைத்துக் கட்டியதால் அந்தக் கோட்டை ராயக்கோட்டை என அழைக்கப்பட்டு, ஊரின் பெயரும் அவ்வாறே விளங்கி வருகிறது.

இந்த வரலாற்று காலத்துக்கு முன்னரே இங்கு உள்ள ஒரு மலைக்குகையில் துர்வாச முனிவர் தவம் செய்ததாக சொல்லப்படுகிறது. அதனால் தான் இந்த ஊரில் பிறக்கும் குழந்தைகளுக்கு துர்வாசன், துர்வாசகி என்று பெயர்கள் சூட்டும் வழக்கம் நிலவி வருகிறது.

மேலும், இந்திய நாட்டிலேயே ஸ்ரீ ராகவேந்திரர் பிருந்தாவனம் அமைந்தது போல இந்த ஊரின் மையத்தில் உள்ள லக்ஷ்மி நாராயணர் ஆலயத்தில் அத்திரி மகரிஷியோட பிருந்தாவனம் அமைந்துள்ளது மிகச்சிறப்பான ஒன்றாக கருதப்படுகிறது.

அத்திரி மகரிஷியின் இந்த பிருந்தாவனத்தை வணங்கி நிமிர்ந்து பார்க்கும் போது எதிரே உள்ள மலையில் துர்வாச முனிவர் தவமிருந்த குகை காட்சி கொடுக்கிறது.

இப்படி, முனிவர் மற்றும் மகரிஷிகள் உலவிய இந்த புண்ணிய பூமியில் தான் பிற்காலத்தில் தன் தவவலிமையால் பல வித்தைகளைச் செய்த சித்தப் பெருமகனார் சடகோபனந்த சுவாமிகள் நலம்பல விளைவித்து நற்புகழ் பெற்றார். யார் இந்த சடகோபானந்த சுவாமிகள்?

அவர் என்னென்ன அற்புதங்கள் நிகழ்த்தினார் என்பதனை இனி பார்ப்போம்.
சடகோபானந்த சுவாமிகள் என்னும் அந்த மகான் பிறந்தது கடலூரில்! பல ஆண்டுகளாக இந்த புனித மண்ணின் தன்மை உணர்ந்து ராயக்கோட்டையிலே வாழ்ந்து சில ஆண்டுகளுக்கு முன்னால் கடலூருக்கு சென்று தான் பிறந்த அந்த ஊரிலேயே ஜீவசமாதி அடைந்தார்.
சுவாமிகள், சுவாமி சிவானந்த பரமஹம்ஸரோட வழியில் யோகக்கலை பயின்றவர், தன்னை நாடி வரும் அனைவருக்கும் அந்த யோகக்கலையின் மூலம் மூச்சுப்பயிற்சியை பயிற்றுவித்து, அவர்கள் ஞானப் பாதையில் செல்ல வழிகாட்டிய யோகி என்று அவரது சீடர்கள் இன்றும் சிலிர்ப்புடன் கூறுகின்றனர்.

இவரிடம் தீட்சை பெற்ற பலருக்கு ஞான மார்க்கத்தை உணர்த்தியுள்ளார். பல பேருக்கு யோகப் பயிற்சியை பயிற்று வித்துள்ளார். இன்னும் சிலரோ மூலிகை வைத்தியம் பயில ஆர்வம் கொண்டு அணுகியுள்ளனர். இவர், சித்த புருஷனாயிற்றே" சித்த மருத்துவமுறையை அவர்களுக்கு கற்றுத் தந்திருக்கிறார்.

அவர்களெல்லாம் இன்றும் இந்த மகான் காட்டிய வழியில் சித்த மருத்துவத்தில் கை தேர்ந்து மக்களின் நோய்த் தீர்க்கும் சேவையை செய்து வருகின்றனர் என்பது வியக்கவைக்கும் உண்மை
அங்க இருந்த பெரிய மலைக்குப் பக்கத்துல ஒரு சிறிய குன்று! வழி முழுவதும் செடி, கொடி, புதர்கள்! மெல்ல மேலே ஏறிச்சென்றால், அங்கே ஒரு அழகான - கச்சிதமான குகை ஒன்று காணப்பட்டது.
இந்த குன்றின் முன்பகுதியில் சுவாமி சடகோபனந்த சுவாமிகள் ஆசிரமம் என்று எழுதப்பட்டுள்ளது. இந்த குகையில் தான் சுவாமிகள் பெரும்பகுதி தன் வாழ்நாளைக் கழித்தாராம். இந்தக் குகையில் சுவாமிகள் தியானம், யோகம் ஆகியன செய்த பகுதி இன்றும் அவரது சீடர்களால் பயன்படுத்தப்படுவதோடு தவறாமல் வணங்கப்பட்டும் வருகிறது.

இந்த குகை வாசலில் அமர்ந்து தலையுயர்த்தி பார்த்தால் எதிரில் உள்ள மலையின் மேல் பகுதி சிவலிங்கம் போலவே காட்சியளிக்கிறது.
சடகோபனந்த சுவாமிகள் இங்கிருந்து கொண்டு, பிரம்மிப்புடன் விளங்கும் மலையை சிவலிங்கம் என்றே எண்ணி, தவம் இருப்பார் என்று அவருடன் இருந்தவர்கள் கூறுகின்றனர்.
ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி நாளில் சடகோபனந்த சுவாமிகளின் சீடர்கள் எல்லோரும் இந்த குகையில் பூஜைகள் செய்து வருகின்றனர். அதோடு, நினைத்த நேரத்தில் இங்கு வந்து தியானம் செய்பவர்களுக்கு மன நிம்மதி கிடைப்பதோடு எண்ணிய எண்ணங்கள் ஈடேறும் அதிசயமும் நிகழ்ந்து வருகிறது.

இதனால் தான் சடகோபனந்த சுவாமிகளின் ஜீவன் இப்போதும் இங்கிருந்து தங்களை வழிநடத்தி, குறை தீர்த்துக் கொண்டிருக்கிறது என எல்லாருமே நம்புகின்றனர் அவரது ஆசியும் இங்கு வருவோர்க்கு நிறைவாக கிடைக்கின்றது.
துர்வாச முனிவர், அத்திரி மகரிஷி, சடகோபனந்த சுவாமிகள் தவிர, மௌனமாய் உலவி வந்த கோவில்பட்டி சுவாமிகள் என்பவரது ஜீவசமாதியும் ஊரின் நடுவே அமைந்துள்ளது.
உலகம் தோன்றிய நாள்முதலே இந்த ராயக்கோட்டையானது தவயோகிகளும் ரிஷிகளும் மகான்களும் உலாவந்த உன்னத தலம் என்பதை அறிந்து ஞானம் தேடுவோர் அனைவரும் நாடி வந்த வண்ணம் உள்ளனர்.

~ ரா. பன்னீர்செல்வம்

# மார்ச் மாத ராசிபலன்கள் – 2021

~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்



## மேஷம்

- காதல் வயப்பட்டிருக்கும் இளைஞர்கள் தனது துணைக்காக அதிக பணத்தையும் செலவு செய்வார்கள்.
- திருமணமான தம்பதிகளுக்கு இடையே கருத்து வேறுபாடு ஏற்படும். குறிப்பாக பண விசயமாக கருத்து வேறுபாடு எழும்.
- நண்பர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் ஆதரவு கிடைக்கப் பெறுவீர்கள்.
- பணப்புழக்கம் குறைவாக இருக்கும் இது உங்கள் மனதில் பதட்டத்தை ஏற்படுத்தும். செலவு செய்வதில் கவனம் தேவை.
- உத்தியோகத்தில் உள்ள அன்பர்கள் இந்த மாதம் பணியில் சில முன்னேற்றங்களைக் காண்பீர்கள்.
- வெளிநாட்டில் உத்தியோகம் தேடுபவர்களுக்கு வெளிநாட்டில் வேலை வாய்ப்பு கிடைக்கப் பெறுவீர்கள்.
- இந்த மாதம் கூட்டுத் தொழில் சிறப்பாக இருக்கும். குறிப்பாக வெளிநாடு சம்பந்தப்பட்ட தொழில் புரிபவர்களுக்கு இது சிறந்த பலன்களை அளிக்கும் மாதம் ஆகும்.
- மாணவர்களுக்கு இந்த மாதம் அதிர்ஷ்டகரமான மாதமாக இருக்கும். வெளி நாடு சென்று கல்வி பயில விரும்பும் மாணவர்கள் பெற்றோரின் வழிகாட்டுதலைப் பின்பற்றினால் வெற்றி காண்பார்கள்.
- முறையான உடற்பயிற்சியும் சத்தான உணவும் உங்கள் ஆரோக்கியத்தைக் காக்கும். துரித உணவு வகைகளைத் தவிர்க்க வேண்டும்.



# ரிஷபம்

- திருமணமான தம்பதிகள் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளதால் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். உங்கள் வார்த்தைகளில் கவனம் தேவை. உணர்ச்சி வசப்படாமல் நிதானமாக செயல் பட வேண்டும்.
- நீங்கள் கடினமாக உழைப்பதன் மூலம் பணியிடத்தில் பெயரும் புகழும் பெறுவீர்கள்.  சக பணியாளர்கள் நட்புணர்வுடன் பழகுவார்கள்.
- இந்த மாதம் தொழிலில் சிறிது பதட்ட நிலை இருக்கும். வெளிநாட்டுத் தொடர்புடன் தொழில் செய்பவர்கள் இந்த மாதம் அதிக பண வரவைக் காண்பார்கள்.
- சென்ற மாதத்தை விட இந்த மாதம் பண வரவு சற்று அதிகமாக இருக்கும். என்றாலும் நீங்கள் கடன் வாங்கக்கக்கூடிய வாய்ப்பும் உள்ளது.
- மாணவர்கள் மனதில் இந்த மாதம் தன்னம்பிக்கை நிறைந்து  இருக்கும். வெளி நாடு சென்று பயில விரும்பும் மாணவர்கள் தங்கள் விருப்பம் நிறைவேறக் காண்பார்கள்.
- இந்த மாதம் உங்கள் ஆரோக்கியம் சவால் மிக்கதாக இருக்கும். சிறு உடல் உபாதைகள் வந்து போகும். அலட்சியப்படுத்தாமல் மருத்துவ பரிசோதனை மேற்கொள்வது சிறப்பு. முட்டி வலி மற்றும் இடுப்பு வலி போன்ற உபாதைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. சத்தான ஆகாரங்களை உட்கொள்ளுங்கள். அதன் மூலம் உங்கள் ஆரோக்கியத்தைத் தக்க வைத்துக் கொள்ள முடியும்.



# மிதுனம்

- காதல் உறவில் உள்ள உங்கள் மனதில் அன்பு மலரும். வார்த்தைகளில் இனிமை இருக்கும். இதன்மூலம் நீங்கள் உங்கள் வாழ்க்கைத் துணையைக் கவர்வீர்கள்.
- கலை மற்றும் இசையில் உங்கள் ஆர்வம் அதிகரிக்கும்.
- உத்தியோகத்தில் இருப்பவர்கள் பதவி உயர்வு மூலம் தன நிலையில் ஏற்றம் கிடைக்கும். இந்த மாதம் நீங்கள் கடுமையாக உழைப்பீர்கள். உங்கள் பணிக்கான அங்கீகாரம் கிடைக்கப் பெறுவீர்கள்.
- தொழிலில் பெயரும் புகழும் பெறுவீர்கள். தொழில் தொடர்பான பயணங்கள் உங்களுக்கு நன்மை அளிக்கும்.
- கூட்டுத் தொழில் இந்த மாதம் உங்களுக்கு சிறந்த வெற்றியை அளிக்கும். என்றாலும் நீங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் கவனமாக எடுத்து வைக்க வேண்டும்.
- இந்த மாதம் முழுவதும் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். பெரிய அளவிலான பாதிப்புகள் ஏதும் இருக்க வாய்ப்பில்லை. என்றாலும் உங்கள் உணவில் நீங்கள் கவனம் செலுத்த வேண்டும். தினமும் உடற்பயிற்சியை மேற்கொள்ள வேண்டும்.
- கல்வி பயிலும் மாணவர்கள் தைரியமாகச் செயல்படுவார்கள். விடாமுயற்சியுடன் செயல்பட்டு வெற்றி காண்பார்கள்.
- போட்டித் தேர்வு எழுதும் மாணவர்கள் அதில் வெற்றி காண்பார்கள்.
- கண்கள் சம்பந்தமான பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே கவனம் தேவை.



# கடகம்

- இளம் வயது காதலர்க்ளுக்கு இந்த மாதம் சிறந்த மாதமாக இருக்கும்.
- திருமணமான அன்பர்கள் தங்கள் துணையுடன் நல்லுறவு பேணுவார்கள். இது உங்கள் வாழ்க்கைத் துணைக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.
- இந்த மாதம் நீங்கள் புனித  ஆன்மீக யாத்திரை மேற்கொள்வீர்கள்.
- உத்தியோகத்தில் உள்ளவர்கள் கடினமாக உழைப்பதன் மூலமும் சக பணியாளர்களிடம் நல்லுறவு பேணுவதன் மூலமும் பணியிடத்தில் நல்ல பெயரும் புகழும் பெறுவீர்கள். பணியிடத்தில் நீங்கள் உங்கள் பொறுப்புகளை சரிவர நிறைவேற்றுவீர்கள்.
- படைப்புத் துறை மற்றும் அரசுத் துறையில் பணி புரிபவர்களுக்கு இது சிறந்த மாதமாக இருக்கும்.
- புதிய கடன்கள் எதுவும் வாங்குவது கூடாது. பண விஷயங்கள் குறித்த அவசர முடிவுகள் எதையும் இந்த மாதம் நீங்கள் மேற்கொள்ள வேண்டாம்.
- மாணவர்கள் சிறப்பாகச் செயல்படுவார்கள். பதட்டம் ஏதும் இன்றி காணப்படுவார்கள். தெளிவான மனதுடன் கடினமாக முயற்சி மேற்கொள்வார்கள்.
- இந்த மாதம் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். என்றாலும் ஒற்றைத் தலைவலி போன்ற சிறு சிறு பிரச்சினைகள் இருக்கும். உடற்பயிற்சிகளை மேற்கொள்ளுங்கள். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள்.



# சிம்மம்

- காதல் வயப்பட்டிருக்கும் இளைஞர்கள் இந்த மாதம் நன்மை தீமை இரண்டும் கலந்த பலன்கள் கிடைக்கப் பெறுவார்கள்.
- திருமணமான தம்பதிகள் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் விட்டுக் கொடுத்து உண்மையாகவும் அனுசரணையாகவும் நடந்து கொள்வார்கள்.
- உத்தியோகத்தில் உள்ளவர்களின் கடின உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். உங்கள் ஊரில் பணி புரிவதை விட வெளி நாடு  சென்று பணி புரிவதன் மூலம் ஆதாயம் பெறுவீர்கள். உங்கள் வசதிகள் யாவும் பெருகும்.
- உத்தியோகத்தில் நீங்கள் சாதுரியமாக நடந்து கொண்டால் பதவி உயர்வு மற்றும் ஊதிய உயர்வு கிடைக்கப் பெறுவீர்கள்.
- அச்சுத் துறை, வணிகம்,  ஐடி போன்ற துறைகளில் இருந்தால் பணியில் பதட்டமான நிலை இருக்கும்.
- கூட்டுத் தொழில் இந்த மாதம் சிறந்த பலன்களை அளிக்கும். நீங்கள் வெளிநாட்டு தொடர்புடைய தொழில் செய்பவர் என்றால் உங்கள் அணுகுமுறை மற்றும் கருத்துக்கள் அவர்களுக்கு பிடித்தமானதாக இருக்கும்.
- மாணவர்கள் சென்ற மாதத்தை விட இந்த மாதம்  கவனமுடன் செயல்படுவார்கள். மாணவர்களிடம் தன்னம்பிக்கை குறைந்து காணப்படும்.
- கல்லூரி முடித்த மாணவர்கள் ஆராய்ச்சி படிப்புகளை மேற்கொள்வார்கள். கல்விக்கான உதவித் தொகை விரும்பும் மாணவர்கள் தங்கள் விரும்பும் வகையில் உதவித் தொகை பெறுவார்கள். .
- உயர்கல்வி படிக்கும் மாணவர்கள் கவனச் சிதறலுக்கு ஆளாவார்கள். என்றாலும் கவனமுடன் படித்தால்  எளிதில் வெற்றி காண்பார்கள்.
- உங்கள் ஆரோக்கியத்தில்  ஏற்ற இறக்க நிலை இருக்கும்.  சிறிது உடல் உபாதைகள் உங்களை வருத்தினாலும் நீங்கள் சமாளித்து முன்னேறுவீர்கள்.



# கன்னி

- நீங்கள் திருமணத்திற்குக் காத்திருப்பவர் என்றால் உங்களுக்கு ஏற்ற துணை கிடைக்கப் பெறுவீர்கள்.
- திருமணமான தம்பதிகளுக்கு மாதத்தின் முற்பகுதி யை விட மத்தியபகுதியில் நல்லுறவு காணப்படும்.
- வேலை பளு காரணமாக நீங்கள் அதிக நேரத்தை வீட்டில் செலவழிக்க இயலாது. எனவே உங்கள் வாழ்க்கைத் துணையுடன் நேரம் செலவழிக்க முயலுங்கள். கடினமான வார்த்தைகள் மற்றும் செயல்களை தவிர்த்து விடுங்கள்.
- பணியிடத்தில் மேலதிகாரிகள் உங்களுக்கு உரிய அங்கீகாரம் வழங்குவார்கள்.
- வீட்டில் குழந்தைப் பிறப்பு, திருமணம் போன்ற மகிழ்ச்சி தரும் சுப காரியங்கள் நடக்கும். பயணங்கள் தொடர்பான செலவுகளையும் நீங்கள் மேற்கொள்வீர்கள்.
- தொழில் சார்ந்த பயணங்கள் உங்களுக்கு நன்மை அளிக்கும். நீங்கள் ஆடை மற்றும் உணவுத் துறையில் பணிபுரிபவர் என்றால் உத்தியோகத்தில் உயர்வு உண்டு.
- கூட்டுத் தொழில் சிறப்பாக இருக்கும். சென்ற மாதம் தொழில் மூலம் கிடைத்த வருமானத்தில் இருந்த ஏற்ற இறக்க நிலை மாறும். சிறந்த வருமானம் கிட்டும்.
- ஆசிரியர்களின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல்களை மாணவர்கள் பெறுவார்கள்.



# துலாம்

- காதல் வயப்பட்டு இருக்கும் இளைஞர்கள் இந்த மாதத்தின் இடைப் பகுதியில் உணரச்சிவசப்படும் சூழ்நிலை ஏற்படும்.
- திருமணமான தம்பதிகள் இந்த மாதத்தின் பிற்பகுதியில் நல்லுறவு கூடும். என்றாலும் விட்டுக் கொடுத்தும் அனுசரித்தும் நடந்து கொள்வதன் மூலம் தம்பதிகள் கருத்து வேற்றுமையைக் களைந்து ஒன்றுமையாக இருப்பார்கள்.
- பணியிடத்தில் நீங்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளை நீங்கள் எளிதில் சமாளிப்பீர்கள். உங்கள் பணிக்கு மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைப்பதை நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள்.
- படைப்புத் துறையில் இருப்பவர்கள் தங்கள் துறையில் படைப்பாற்றல் மற்றும் புத்திசாலித்தனத்தின் மூலம் சாதிப்பார்கள்.
- வங்கித் துறை, கல்வித்துறை, ஊடகத் துறை மற்றும் பொழுதுபோக்குத் துறையில் இருக்கும் தொழில் வல்லுனர்கள் இந்த மாதம் தங்கள் தொழிலில் பிரகாசிப்பார்கள்.
- மாணவர்கள் இந்த மாதம் சிறப்பாகக் கல்வி பயில்வார்கள். கவனமுடன் படித்து கல்வி உதவித் தொகை கூடப் பெறுவார்கள்.
- பொறியியல் படிக்கும் மாணவர்கள் சிறந்த முறையில் தேர்வுகளை எழுதி சிறந்த மதிப்பெண்களைப் பெறுவார்கள்.
- இந்த மாத முதல் பகுதியில் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். அதன் பிறகு குடும்ப பிரச்சினைகள் காரணமாக ஏற்படும் மன அழுத்தம் உங்கள் உடல் நலத்தை பாதிக்கும்.



# விருச்சிகம்

- இந்த  மாதம் நீங்கள் காதலுக்கு முக்கியத்துவம் அளிப்பீர்கள். காதல் குறித்த முக்கிய முடிவுகளை நீங்கள் எடுப்பீர்கள். உங்கள் வாழ்க்கைத் துணை உங்கள் நலனில் அக்கறை எடுத்துக்கொள்வார்.
- திருமணமான தம்பதிகளுக்கு இடையே பரபஸ்பர நெருக்கம் அதிகரிக்கும். குழந்தைகளுடனான உறவு சிறப்பாக இருக்கும்.
- உத்தியோகத்தில் உள்ளவர்கள் பணி நிமித்தமாக வெளிநாடுகளுக்குச் செல்ல நேரிடலாம். அதன் மூலம் ஆதாயம் பெறுவீர்கள். உங்கள் சக பணியாளர்கள் உங்களுக்கு ஒத்துழைப்பு அளிப்பார்கள்.
- கலை, இசை, நாடகம், நடனம் போன்ற படைப்பு மற்றும் கலைத் திறன் தொடர்புடைய துறையில் இருப்பவர்கள் இந்த மாதம் சாதனைகளைப் புரிவார்கள்.
- இந்த மாதம் கூட்டுத் தொழில் மூலம் நீங்கள் சிறந்த மாற்றங்களைக் காண்பீர்கள். உங்கள் தொழில் சிறப்பாக நடக்கும். நீங்கள் தொழிலை  விரிவாக்கம் செய்ய வேண்டி புதிய இடத்திற்கு மாறுவீர்கள்.
- சென்ற மாதங்களை விட இந்த மாதம் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். என்றாலும் தலைவலி போன்ற சிறு உபாதைகள் வந்து நீங்கும். யோகா, தியானம் போன்ற பயிற்சிகளை மேற்கொள்ளுங்கள்.
- மாணவர்கள் விடாமுயற்சியுடன் செயல்பட்டு முன்னேற்றம் காண்பார்கள். எனவே மாணவர்களுக்கு இந்த மாதம் சிறப்பான மாதமாக இருக்கும்.



# தனுசு

- இளம் வயது அன்பர்கள் மனதில் காதல் அரும்பு மலர்ந்து  தங்கள் மனம் விரும்பும் துணையைக் கண்டு கொள்ளும் மாதமாக இருக்கும்.
- திருமணமான தம்பதிகள் தங்கள் வாழ்க்கைத் துணைக்கென நேரம் ஒதுக்க இயலாத காரணத்தால் உறவில் அதிருப்தியும் மகிழ்ச்சியின்மையும் இருக்கும்.
- உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு இந்த மாதம் வளர்ச்சி காணும் வகையில் கிரக நிலைகள் இல்லை. நீங்கள் கடினமாக உழைத்தாலும் சிறிய அளவில் தான் அதற்குரிய பலனைப் பெற இயலும்.
- எழுத்துத் துறை, நடிப்புத் துறை மற்றும் கலைத் துறையில் இருப்பவர்கள் சிறந்த வகையில் வருமானம் ஈட்டுவார்கள்.
- வியாபாரம் செய்பவர்கள் தங்கள் விற்பனை அதிகரிக்கக் காண்பார்கள்.
- சுய தொழில் செய்பவர்கள் அதிக லாபத்தை ஈட்டுவார்கள்.
- வெளிநாட்டு வியாபாரம் மற்றும் ஏற்றுமதி இறக்குமதி தொழிலில் இருப்பவர்கள் தொழில் நிமித்தமாக வெளிநாடு செல்லும் வாய்ப்பு கிட்டும்.
- கல்வி பயிலும் மாணவர்கள் ஆசிரியர் மற்றும் பெற்றோரின் வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும்.
- போட்டித் தேர்வு எழுதும் மாணவர்கள் வெற்றி காண கடுமையாக உழைக்க வேண்டும்.
- இந்த மாதம் உங்கள் ஆரோக்கியம் சீராக இருக்க வாய்ப்பில்லை. எனவே உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சோம்பலும் களைப்பும் உங்களை வாட்டும்.

# மகரம்



- காதல் உறவில் இருப்பவர்களுக்கு சிறியவிஷயங்களுக்கெல்லாம் கருத்து வேறுபாடுகள் ஏற்படும். வாக்கில் கவனம் தேவை.
- கணவன் மனைவி உறவில் ஒற்றுமை கூடும். உங்கள் வாழ்க்கைத் துணைக்கென நேரம் ஒதுக்கி அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள்.
- உத்தியோகத்தில் உள்ளவர்கள் பணியில் சிறந்து விளங்க கடினமாக உழைக்க வேண்டும்.
- மருத்துவத் தொழில், சட்டம் மற்றும் எழுத்துத் துறையில் இருப்பவர்கள் இந்த மாதம் கணிசமாக பணம் சம்பாதிப்பார்கள்.
- வியாபரிகள் சிறந்த லாபம் காண்பார்கள். உங்கள் கனவுகள் யாவும் நிறைவேறும் மாதமாக இந்த மாதம் இருக்கும்.
- சுய தொழிலில் போட்டிகளை சந்திப்பீர்கள். முதலீடுகளை மேற்கொள்ளும் போது கவனம் தேவை.
- கல்வி பயிலும் மாணவர்கள் கடுமையாக உழைத்துப் படிக்க வேண்டும்.
- ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தொண்டைப் பகுதியில் அல்லது கழுத்துப் பகுதியில் பிரச்சினை ஏற்பட வாய்புள்ளது. சிறிய பிரச்சினை என்றாலும் உடனடியாக மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளுங்கள். உணவில் காய்கறிகளை சேர்த்துக் கொள்ளுங்கள்.



# கும்பம்

- கணவன் மனைவி உறவை பொறுத்தவரை அனுசரித்தும் விட்டுக் கொடுத்தும் செல்வதன் மூலம் கணவன் மனைவி உறவில் நெருக்கம் அதிகரிக்கும்.
- குடும்பத்தில் சிறு கருத்து வேறுபாடுகள் ஏற்படலாம். குடும்பத்தில் அமைதி நிலவ  சண்டை மற்றும் வாக்கு வாதத்தை தவிர்க்க வேண்டும்.
- தொழில் மற்றும் வியாபாத்தில் ஈடுபட்டிருக்கும் அன்பர்கள் தாங்கள் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்த வங்கிக் கடன்கள் பெறுவதற்கான வாய்ப்பு உள்ளது. புதிய தொழிலுக்கான முதலீடுகளை இப்பொழுது நீங்கள் மேற்கொள்ளலாம்.
- இந்த மாதம் பொருளாதார நிலை உங்களுக்கு வாழ்வில் ஊக்கம் அளிக்கும் வகையில் இருக்கும். சொத்து அல்லது உயில் சம்பந்தமான சட்டச் சிக்கல்கள் ஏதேனும் இருந்தால் அவை இந்த மாதம் உங்களுக்கு சாதகமான பலன்களைத் தரும்.
- இந்த மாதம் மாணவர்களுக்கு மிகவும் மகிழ்ச்சியான மாதமாக இருக்கும்.
- பட்டப்படிப்பு படிக்கும் மாணவர்கள் படிப்பிற்கென நேரம் ஒதுக்கிப் படித்தால் தான் சிறந்த வெற்றிகளைக் காண முடியும்.
- வெளிநாடு சென்று  படிக்க விரும்பும் மாணவர்களுக்கு இந்த மாதம் அனுகூலமான மாதமாக இருக்கும்.
- ஆரோக்கியத்தில் சிறிது கவனம் தேவை. தினமும்  உடற்பயிற்சி செய்வதன் மூலம் உங்கள் ஆரோக்கியத்தை நீங்கள் பாதுகாத்துக் கொள்ள இயலும்.



# மீனம்

- இள வயது அன்பர்கள் இந்த மாதம் தங்கள் காதலை வெளிப்படுத்த  ஏற்ற தருணம் ஆகும்.
- கணவன் மனைவி உறவில் உள்ளவர்கள் உங்கள் வாழ்க்கைத் துணையை வெளியிடங்களுக்கு அழைத்துச்  சென்று மகிழ்விப்பதற்கு இந்த மாதம் உங்களுக்கு சாதகமாக இருக்கும். இதனால் இருவருக்கும் இடையே அன்பும் நெருக்கமும் அதிகரிக்கும்.
- உத்தியோகத்தில் இருப்பவர்களும் தடைகளைத் தாண்டி சிறப்பாக பணியாற்றி தங்கள் இலக்குகளை எட்டுவார்கள்.
- தொழில் மற்றும் வியாபாரம் செய்பவர்களுக்கு இது சிறந்த மாதமாக இருக்கும். தொழிலில் அதிக லாபமுண்டு.
- மாணவர்களுக்கு இந்த மாதம் சிறப்பான மாதமாக இருக்கும். மாணவர்கள் பதட்டமின்றி செயல்படுவார்கள்.
- முதுகலை பட்டம் படிக்கும் மாணவர்கள் சிறந்த முறையில் வெற்றி காண்பார்கள்.
- விஞ்ஞானம் மற்றும் தொழில்  நுட்பத் துறையில் இருக்கும் மாணவர்கள் பகுதி நேர வேலை பெறுவார்கள்.
- உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். பெரிய அளவிலான பாதிப்புகள் ஏதும் இருக்காது என்றாலும் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். மலச்சிக்கல் போன்ற வயிறு சம்பந்தமான உபாதைகள் வருவதற்கு வாய்ப்பு உள்ளது என்பதால் உங்கள் உணவில் கவனம் செலுத்த வேண்டும்.

அனைத்து ஜோதிட, புரோஹித மற்றும் ஆன்மிக சேவைகளுக்கு
தொடர்புகொள்ள: **88702 88701**